தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>தமிழகம், புதுச்சேரியில் இன்று மழைக்கு வாய்ப்பு</u>

தமிழகம், புதுச்சேரியில் திங்கள்கிழமை ஒரு சில இடங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும். ஞாயிறுக்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி, விருதுநகர் மாவட்டம் திருச்சுழி யில் தலா 20 மி.மீ, தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை, விருதுநகர் ஆகிய இடங்களில் தலா 10 மி.மீ மழை பதிவானது. வெயிலை பொறுத்தவரை அதிகபட்சமாக திருச்சியில் 102 டிகிரி, பாளையங் கோட்டையில் 101 டிகிரி வெயில் ஞாயிற்றுக்கிழமை பதிவானது. மழை குறைந்தது : பெரியாறு அணை நீர்மட்டம் 133 அடியாக நீடிப்பு முல்லைப் பெரியாறு அணையின் நீர்பிடிப்புப் பகுதிகளில் பருவ மழை குறைந்ததை அடுத்து, அணையின் நீர்மட்டம் 132.90 அடியாக நீடிக்கிறது. பருவ மழை தீவிர மடைந்த போது அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருந்ததால், முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பும் அதிகரிக்கப் பட்டது. இதனால் வைகை அணையின் நீர்மட்டமும் அதிகரித்து வந்தது. தற்போது மழை குறைந்ததால் நீர்வரத்து 503 கன அடியாக உள்ளது. பெரியாறு அணையில் இருந்து 500 கன அடி நீர் திறக்கப்படுகிறது. நீர்வரத்து அதிகமாக இருந்ததால் முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 136 அடியை எட்டி விடும் என்று விவசாயிகள் எதிர்பார்த்திருந்த நிலையில், 2 நாட்களாக அணையின் நீர்மட்டம் 133 அடியாகவே நீடித்து

வருகிறது.

## மானாமதுரையில் விவசாயிகள் சங்கம் பிரசாரம்

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கோரி, மானாமதுரை ஒன்றியத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் பிரசார நடைபயணம் நடைபெற்றது. சிவகங்கை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், கூட்டுறவு வங்கி விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், வைகையாற்றில் தண்ணீர் திறக்க வேண்டும், பயிர் காப்பீட்டுத் தொகை ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, மானாமதுரை ஒன்றியம் கீழமேல்குடி கிராமத்தில் விவசாயிகள் சங்கம் சார்பில் பிரசார நடைபயணம் தொடங்கியது. விவசாயிகள் சங்க மாவட்ட செயற்குழு உறுப்பினர் பி.வெள்ளைமுத்து தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் கே.வீரபாண்டி, ஒன்றியச் செயலர் ஆண்டி, தலைவர் ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒன்றியச் செயலர் முத்துராமலிங்கபூபதி உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர். பல்வேறு கிராமங்களில் நடந்த இந்த பிரசாரம் இடைக்காட்டூரில் முடிவடைந்தது.

## குன்னூரில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

குன்னூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை திடீரென பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி டைந்துள்ளனர். குன்னூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வழக்கமாக பெய்ய வேண்டிய தென்மேற்குப் பருவமழை பொய்த்துப் போனதால் மலைத் தோட்ட காய்கறிகள் பயிரிட்டிருந்த விவசாயிகள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர். இந்நிலையில், செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் பெய்ய வேண்டிய வடகிழக்கு பருவ மழையை நம்பி விவசாயிகள் கேரட், பீட்ரூட் உள்ளிட்ட மலைக் காய்கறிகளை

பயிரிட்டுள்ளனர். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை குன்னூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்துவரும் சாரல் மழையின் காரணமாக மலைத்தோட்ட காய்கறிகள் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நவீன முறையில் ஆடுகள் வளர்ப்பு: விவசாயிகள், வல்லுநர்கள் கலந்துரையாடல்

நவீன முறையில் ஆடுகள் வளர்ப்பு குறித்து விவசாயிகள், வல்லுநர்கள் கலந்துரையாடல் கூட்டம் நாமக்கல்லில் நடைபெற்றது. நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் விரிவாக்கத் துறை சார்பில் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் நாமக்கல், ஈரோடு, கோவை, திண்டுக்கல், சேலம், திருப்பூர் மாவட்டங்களில் இருந்து நவீன முறையில் ஆடுகள் வளர்க்கும் சுமார் 70 விவசாயிகள் பங்கேற்றனர். அவர்கள் ஆட்டுப் பண்ணைத் தொழிலில் எதிர்கொள்ளும் பிரச்னைகளையும், சந்தேகங்களையும் தெரிவித்தனர். இதற்கு அந்தப் பிரச்னைகளை எதிர் கொண்டு முன்னேறிய பண்ணையாளர்களும், கல்லூரி மருத்துவர்களும் விளக்கம் அளித்தனர். இந்தக் கலந்துரையாடல் குறித்து கல்லூரியின் விரிவாக்கத் துறை தலைவர் என்.நர்மதா கூறியது: தற்போது வணிகரீதியாக பண்ணைகள் அமைத்து ஆடுகள் வளர்க்கும் தொழில் மிகவும் பிரபலமாகி வருகிறது. எனினும், ஆடுகள் வளர்ப்பில் போதிய விழிப்புணர்வு இல்லாததால் விவசாயிகள் பல்வேறு நிலைகளிலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையைப் போக்கிடவும், விவசாயிகள், கால்நடை மருத்துவ வல்லுநர்களிடையே தொடர்பை ஏற்படுத்திடவும் இந்தக் கலந்துரையாடல் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பங்கேற்ற பண்ணையாளர்கள், பண்ணை மேலாண்மை, இனப்பெருக்கம், நோய் தடுப்பு, விற்பனை வாய்ப்புகள், செயற்கை முறை கருவூட்டல், குறைந்த விலையில் கலப்புத் தீவனம் தயாரித்தல், ஆடுகளைத் தேர்வு செய்தல், குறைந்த செலவில் கொட்டகை

அமைத்தல், இளங்குட்டிகள் பராமரித்தல் ஆகியவை குறித்து கேள்வி எழுப்பினர். அவர்களின் கேள்விகளுக்கு மற்ற பண்ணையாளர் களும், கால்நடை மருத்துவர்களும் பதில் அளித்தனர். குறிப்பாக, பண்ணைகளில் உயர் ரக ஆடுகள் வளர்ப்பதைக் கூட்டிலும் உள்ளூர் ரக ஆடுகள் வளர்ப்பதே பொருளாதார ரீதியாக சிறந்தது என்றும், ஆடுகள் விற்பனை யில் பண்ணையாளர்கள் சங்கம் அமைத்துச் செயல்பட்டால் தொடர்ச்சி யான வியாபாரத்துக்கும், வருவாய் இழப்பைத் தவிர்க்கவும் முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. தவிர, புல்வெட்டும் இயந்திரங் களுக்கு தனியாக மின் இணைப்பு பெற்றுக் கொள்ள தற்போது அரசாணை வெளியிடப்பட்டிருப்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், ஆடுகளுக்கான தடுப்பூசி அட்டவணை, குறைந்த செலவில் அடர் தீவனம் தயாரித்தல், சிறந்த ஆடுகளைத் தேர்வு செய்தல், முதலுதவி சிகிச்சை, கால்நடைகளில் ஏற்படும் முக்கிய நோய்கள், பண்ணை இயந்திரங்கள் பற்றிய மடிப்பிதழ்கள், ஆடு வளர்ப்பு குறித்த புத்தகம் ஆகியவை வழங்கப்பட்டன. அந்தவகையில், இந்தக் கலந்துரையாடல் மூலம் ஆட்டுப் பண்ணைத் தொழிலை லாபகரமாகக் கொண்டு செல்ல வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது என்றார் அவர். கலந்துரையாடலில் பங்கேற்ற விவசாயிகளுக்கு கல்லூரி முதல்வர் கே.ஏ.துரைசாமி சான்றிதழ் வழங்கினார். பேராசிரியர்கள் ரமேஷ் சரவணக்குமார், என்.முரளி, வசந்தகுமார், அனில்குமார், செல்வராசு, செந்தில்குமார், உதவிப் பேராசிரியர்கள் மொ.சக்திவேல், வே.உமா, ஜோதிலட்சுமி, மருத்துவர் மனோகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## <u>பத்ரா மேலணைத் திட்டம் நிறைவேற்றப்படும்</u>

பத்ரா மேலணைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று, கர்நாடக சமூக நலத் துறை அமைச்சர் எச்.ஆஞ்சநேயா தெரிவித்தார். பத்ரா நீர்ப்பாசனத் திட்ட போராட்டக் குழு சார்பில், பெங்களூருவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பத்ரா நீர்ப்பாசன உரிமை மாநாட்டில் அவர் பேசியது:

சித்ரதுர்கா மாவட்டம் உள்ளிட்ட சமவெளி பகுதிக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துவதற்காக பத்ரா மேலணைத் திட்டத்தை நிறைவேற்ற உறுதியாக உள்ளது. காங்கிரஸ் அரசின் பதவிக் காலம் முடிவடைதற்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்ற உறுதிமொழியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பத்ரா மேலணைத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சுற்றுச்சூழல், வனத் துறையின் தடங்கல்கள் உள்ளன. இதனால், அந்தப் பணியைத் தொடங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு அனுமதி பெறுவது குறித்து மத்திய வனம், சுற்றுச்சூழல் அமைச்சகத்தை அணுகுவோம். பத்ரா மேலணைத் திட்டம் தாமதமாகி வருவது சித்ரதுர்கா மாவட்டம் உள்ளிட்ட சமவெளிப்பகுதி மக்களிடையே அதிருப்தி இருப்பதை அறிவேன். எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு உறுதியான நடவடிக்கையை எடுக்கும். மேலும், இந்த விவகாரத்தில் விவசாயிகள், போராட்டக்காரர்களுக்கு எந்தவித சந்தேகமும் வேண்டாம். பத்ரா மேலணைத் திட்டத்தை நிறைவேற்றி விவசாயப் பணிகளுக்கு நீர்ப்பாசனத்தை வழங்குவோம். இந்தத் திட்டத்திற்கு மத்திய வனம், சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அனுமதியைப் பெறுவதற்கு அவசியம் ஏற்பட்டால், முதல்வர் சித்தராமையா தலைமையில் குழு ஒன்றை தில்லிக்கு அழைத்து செல்வோம். பத்ரா மேலணைத் திட்டத்திற்காக விவசாயிகள் நடத்தும் போராட்டத்திற்கு அரசியல்வாதிகளாகிய நாங்களும் ஆதரவாக இருப்போம் என்றார் அவர். விழாவில் அரசுத் தலைமை வழக்குரைஞர் ரவிவர்ம குமார், பத்ரா நீர்ப்பாசனத் திட்ட போராட்டக் குழுத் தலைவர் லட்சுமண் ஹூகார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த அமைச்சர் ஆஞ்சநேயாவை முற்றுகையிட்ட விவசாயிகள், இந்தத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்தக் கோரி வலியுறுத்தினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாய நிலங்களில் களையை கட்டுப்படுத்த நிழற்போர்வை</u>**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், நிலங்களில் களையை கட்டுப்படுத்த, விவசாயிகள் நிழற்போர்வை அமைக்க, ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் நெல், கரும்பு, தக்காளி, மா, கரும்பு, துவரை, பருத்தி, மரவள்ளி கிழங்கு உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும், காய்கறி பயிர்கள் மற்றும் மலர் சாகுபடி முக்கிய பங்கு வகித்து வருகிறது. பட்டன் ரோஸ், சாமந்தி, சம்மங்கி, கோழிக்கொண்டை, மல்லிகை, முல்லை உள்ளிட்ட மலர்கள் குறிப்பிட்ட பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மலர் சாகுபடி மூலம் விவசாயி களுக்கு போதிய வருவாய் கிடைத்து வந்த போதிலும், களை எடுத்தல், பூச்சி கொல்லி மருந்து உள்ளிட்டவைகளுக்கு, அதிக செலவு செய்யும் நிலை ஏற்பட்டு வருகிறது. இதை தடுக்க, பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள், பசுமை குடில் மூலம், மலர் செடிகளை வளர்த்து வருகின்றனர். பல விவசாயிகள், களை மற்றும் நிலங்களில் இருந்து, தண்ணீர் அதிகளவு உறிஞ்சப்படுவதை தடுக்க, விவசாய நிலங்களில், நிழற் போர்வை அமைக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரியை அடுத்த, ஆலிவாயன்கொட்டாய் உட்பட, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், விவசாயிகள், தங்களது நிலங்களில், நிழற் போர்வை அமைத்து, மலர்களை சாகுபடி செய்துள்ளனர். இதுகுறித்து ஆலிவாயன் கொட்டாயை சேர்ந்த விவசாயி வேடியப்பன் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், சில ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்ததால், விவசாய கிணறுகளில் நீர் மட்டம் குறைந்தது. இதனால், விவசாயிகள் கிணறுகளை ஆழப்படுத்தி வருகின்றனர். சில விவசாயிகள், குறைந்த

தண்ணீரில், விவசாய பயிர்களை சாகுபடி செய்ய, சொட்டு நீர் பாசனம் அமைத்து வருகின்றனர். பட்டன் ரோஸ் உட்பட பல்வேறு மலர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, மலர் செடிகளுக்கு, தென்னை நார் கொட்டியும், அதன் மீது பாலிதீன் கவர் மூலம் நிழற் போர்வை அமைத்து வருகின்றனர். விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறையுள்ள நிலையில், நிழற்போர்வை அமைப்பதன் மூலம், களைகளை கட்டுபடுத்த முடிகிறது. ஒரு ஏக்கர் பட்டன் ரோஸ் செடிகளுக்கு நிழற் போர்வை அமைக்க, 10 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. தோட்டக்கலைத்துறையினர், நிழற் போர்வை அமைக்க தேவையான, பாலிதீன் கவர்களை, விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி வருகின்றனர். இதற்கு காலதாமதம் ஏற்பட்டு வருவதால், பெரும்பாலன விவசாயிகள், இலவசமாக பாலிதீன் கவர்களை வாங்க முடியாத நிலை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஆடு பயனாளிகளுக்கு மீண்டும் நிதி வழங்குவதால் சர்ச்சை! இலவச கொட்டகை அமைக்க 380 பேர் தேர்வு**

திருக்கழுக்குன்றம், செப். 15-மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆயிரம் நபர்களுக்கு இலவச மாக கால்நடை கொட்டகை அமைக்க மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதில் இலவசமாக ஆடு பெற்ற பயனாளிகள், 380 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆடு இலவசமாக வழங்கிய போதே, கொட்டகை அமைக்க தலா, 2,500 ரூபாய் வழங்கப்பட்டது. தற்போது மீண்டும் நிதி ஒதுக்குவதால், சர்ச்சை எழுந்துள்ளது.காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. கிராம பகுதிகளில் உள்ள பெரும் பாலானோர் கால்நடைகளை வளர்த்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயினை வைத்து வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.12 ஒன்றியங்கள் மாவட்டத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், சிட்லப்பாக்கம்

என, நான்கு இடங்களில் கால்நடை துறை உதவி இயக்குனர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. இதில் காஞ்சிபுரம் கோட்டத்தின் கீழ் காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதுார், உத்திரமேரூர், வாலாஜாபாத், குன்றத்துார் ஆகிய 5 ஒன்றியங்களும், செங்கல்பட்டு கோட்டத்தின் கீழ் காட்டாங் கொளத்துார், திருப்போரூர், திருக்கழுக்குன்றம் ஆகிய 3 ஒன்றியங்களும், மதுராந்தகம் கோட்டத்தின் கீழ் மதுராந்தகம், அச்சிறுபாக்கம், லத்துார், சித்தாமூர் ஆகிய 4 ஒன்றியங்களும் என, 12 ஒன்றியங்களில் 2011ம் ஆண்டிலிருந்து இலவச கால்நடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.கடந்தாண்டு வரை இலவச கால்நடை வழங்கும் திட்டத்தில் 2,650 பயனாளிகளுக்கு மாடுகளும், 15,176 பயனாளிகளுக்கு 60,176 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.1,000 நபர்கள் தேர்வுஇந்த நிலையில், கால்நடை வளர்ப்பு விவசாயிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி களுக்கு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், இலவசமாக கொட்டகை அமைத்து தர அரசு முடிவு செய்துள்ளது. மாவட்டத்தில் இதற்காக, முதற்கட்டமாக, 370 கறவை மாடு பயனாளிகள், 380 ஆடு வளர்ப்பு பயனாளிகள், 50 நாட்டுக்கோழி பண்ணை விரிவாக்க திட்ட பயனாளிகள், ஆவின் நிறுவனத்திற்கு பால் வழங்கும் 200 கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் என, மொத்தம் 1,000 நபர்களுக்கு இலவச கொட்டகை அமைத்து தர முடிவு செய்யப்பட்டு உள்ளது.இதுகுறித்து, கால்நடை துறை அலுவலர் ஒருவர் கூறுகை யில், "இலவச கால்நடை திட்டத் தின் மூலம் பயன்பெற்றவர்கள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஊரக வளர்ச்சி துறையின் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் கொட்டகை அமைத்து தரப்படும். இதற்கான பணி நடைபெற்று வருகிறது," என்றார்.இதற்கிடையில், அரசின் இலவச ஆடுகள் வளர்க்கும் திட்டத்தின் பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும்போது, கொட்டகை அமைக்க, தலா

2,500 ரூபாய் வழங்கப்பட்டது. தற்போது இதே பயனாளிகளுக்கு, புதிய கொட்டகை அமைக்க, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், தலா 90 ஆயிரம் ரூபாய் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ஒரே பயனாளிக்கு இரு முறை கொட்டகை அமைக்க அரசு நிதி ஒதுக்குவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.'இந்த நிதியை, அரசு, கல்வி திட்டத்திற்கு பயன்படுத்தலாம். ஏராளமான பள்ளிகள், முறையான கட்டுமானமும், சுகாதாரமும் இன்றி இருக்கின்றன. அவற்றை சீரமைக்க பயன்படுத்தலாம். அதை விடுத்து, மீண்டும் மீண்டும் ஒரே பயனாளி களுக்கு நிதி ஒதுக்குவது எந்த விதத்தில் நியாயம்?' என்று கல்வியாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.ஒரு கொட்டகை அமைக்க திட்ட மதிப்பீடு பயனாளி - மதிப்பீடு(லட்சத்தில்) - சதுர அடி - கட்டுமானப் பொருட்கள் (லட்சத்தில்) - கூலி (ஆயிரத்தில்)மாடு - 1.30 - 272.13 - 1.18 - 12ஆடு - 0.90 - 134.06 - 0.81 - 9கோழி - 0.75 - 134.00 - 0.68 – 7

**<u>தென்னங்கன்றுகள் நடவிற்கு அரசு மானியம்</u>**

அவலூர்பேட்டை: தென்னங்கன்றுகள் நடவிற்கு அரசு மானியம் வழங்கப்படுவதாக வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். அவலூர்பேட்டை அடுத்த நாரணமங்கலத்தில் உலக தென்னை தின விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதில் மேல்மலையனூர் வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி பேசியதாவது: தென்னை சாகுபடிக்கு நெட்டை, குட்டை மற்றும் குட்டை , நெட்டை தென்னங்கன்றுகள் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. ஒரு எக்டேரில் 175 கன்றுகளை நடவு செய்யலாம். கன்றுகளுக்கிடையே 25 அடி தூரம் இடைவெளி தேவை. மூன்று அடி நீள, அகல ஆழமுள்ள குழி எடுத்து, அதில் லிண்டேன் தூளை தூவி விட வேண்டும். இதனால் கரையான் தாக்குதலிலிருந்து கன்றுகளை பாதுகாக்கலாம். மூன்று அடி குழியில் இரண்டு அடி உயரத்திற்கு தொழுஉரம், மணல், செம்மண் சம

பங்கு கலந்து நிரப்ப வேண்டும். குழியின் மையத்தில் தென்னங்கன்றினை வைத்து நாற்றையும், அதனை சுற்றியுள்ள தேங்காயையும் மண் அணைப்பு செய்ய வேண்டும். முதல் ஆண்டில் ஒரு நாள் விட்டு ஒரு நாள், இரண்டாமாண்டு முதல் காய் பிடிக்கும் வரை வாரம் இரண்டு முறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். ஐந்தாம் ஆண்டு முதல் தென்னை மரங்களுக்கு 50 கிலோ தொழு உரமிடவேண்டும். தென்னையின் அடிபாகத்திலிருந்து 1.8 மீட்டர் ஆரத்தில் வட்டப்பாத்தி அமைத்து யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஸ் 2 கிலோ என்ற அளவில் இட்டு கொத்திய பின், நீர்பாய்ச்ச வேண்டும். தென்னையில் காண்டமிருக வண்டு தாக்குதலை கட்டுப்படுத்த ஒரு கிலோ ஆமணக்கு புண்ணாக்கை 5 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து தோப்புகளில் ஆங்காங்கே வைத்து, அழிக்கலாம். போரேட் 10 சத குருணை மருந்து 5 கிராமை குண்டூசியில் துளையிட்ட பாலிதீன் பையில் வைத்து மடல் பகுதியில் உள்ளே வைப்பதன் மூலம் வண்டுகளின் சேதத்தை கட்டுப்படுத்தலாம். ஈரியோ பைட்-சிலந்தி பூச்சியை கட்டுப்படுத்த மோனோ குரோட்டோபாஸ்-2 மி.லி.,யை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். வேம்பு கரைசல் 5 மி.லி.,ஒரு லிட்டர் நீரில் கலந்தும் தெளித்து கட்டுப்படுத் தலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி பேசினார்.

## மேட்டூர் அணை நீர் திறப்பு 23,000 கனஅடியாக அதிகரிப்பு

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு, நேற்று முன்தினம் இரவு, வினாடிக்கு, 23 ஆயிரம் கனஅடியாக அதிகரித்த நிலையில், நேற்று நீர்மட்டம், 100.320 அடியாக சரிந்தது. காவிரி நீர் பிடிப்பு பகுதியில், பருவமழை தீவிரம் குறைந்ததால், நேற்று முன்தினம், 12 ஆயிரத்து, 33 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 7,542 கனஅடியாக குறைந்தது. இந்நிலையில், வினாடிக்கு, 20 ஆயிரம் கனஅடியாக இருந்த, டெல்டா பாசன நீர் திறப்பு, நேற்று

முன்தினம் இரவு, வினாடிக்கு, 23 ஆயிரம் கனஅடியாக, அதிகரிக்கப் பட்டது. அதனால், நேற்று முன்தினம், 101.320 அடியாக இருந்த, அணையின் நீர்மட்டம், 100.320 அடியாக சரிந்தது. கடந்த ஜூலை, 17ல், 47 அடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்மட்டம், தென்மேற்கு பருவமழையால், ஆக.,8ம் தேதி, 100 அடியாகவும், அதிகபட்சமாக, 113 அடியாக அதிகரித்த நிலையில், 37 நாட்களுக்கு பின்னர், நேற்று, 100 அடியை எட்டியது குறிப்பிடத்தக்கது.

## எதிர்பார்ப்பு! : மஞ்சளுக்கு விவசாயிகள் விலை.... : குறைந்து வரும் சாகுபடி பரப்பு

ஈரோடு: கடந்தாண்டை போல் இந்தாண்டும் தீபாவளி சீஸன் காலத்தில் மஞ்சளுக்கு அதிக விலை கிடைக்குமா என எதிர்பார்ப்பு நிலவுகிறது. கடந்த சில ஆண்டாக மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்காத நிலை இருந்து வருகிறது. கர்நாடகா, ஆந்திரா மாநிலங்கள் மட்டுமின்றி தர்மபுரி, திருவண்ணாமலை, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மஞ்சள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

ஈரோட்டில் கோபி மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், செம்மாம்பாளையம் தனியார் விற்பனைக்கூடம் உள்ளிட்ட பகுதிகளில் மஞ்சள் ஏலம் நடக்கிறது. தினமும் சராசரியாக, எட்டாயிரம் குவிண்டால் வரை ஏல விற்பனை செய்யப்படுகிறது. 2010ம் ஆண்டு மஞ்சள் விலை, தங்கத்திற்கு இணையாக ரூ.17,268 க்கு விற்றது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டனர். விளைச்சல் அதிகமானதால் வியாபாரிகள் விலையை குறைத்தனர். மேலும் கடும் வறட்சி காரணமாகவும் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்தது. மாவட்டத்தில் கடந்தாண்டு மட்டும் 8,100 ஹெக்டர் பரப்பில் மஞ்சள் பயிரிடப்பட்டது. ஆனால் இந்தாண்டு, 5,700 ஹெக்டராக பரப்பு சுருங்கியது. பயிர் செய்ய வேண்டிய காலத்தில் நீர் ஆதாரம் இல்லாததே

இதற்கு பிரதான காரணம். கடும் வறட்சியால் மஞ்சளை பயிரிடுவதை தவிர்த்து விவசாயிகள் குறுகிய கால பயிர்களை நடவு செய்துள்ளனர். மேலும் ஒவ்வொரு ஆண்டும் விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் மஞ்சளை நடவு செய்து ஏமாற்றம் அடைந்ததே இதற்கு காரணம். கிழங்கு அழுகல் நோயால் மஞ்சள் விளைச்சல் குறைந்து பாதிப்படைந்துள்ள விவசாயிகள், மூன்று ஆண்டுகளாகவே உரிய விலை கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர். தீபாவளி சீசன் காலத்தில் வட மாநில வியாபாரிகள் அதிகளவில் மஞ்சளை வாங்கி செல்வது வழக்கம். அப்போது அதிக விலை கிடைக்கும். கடந்தாண்டு வரை இது நடைமுறையாக இருந்தது. எனவே இந்தாண்டும் தீபாவளி சீஸன் காலங்களில் அதிகளவில் மஞ்சளை வாங்கி செல்ல கூடும். அக்கால கட்டத்தில் மஞ்சளுக்கு அதிக விலை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பு மேலோங்கி உள்ளது. இந்திய மஞ்சள் உற்பத்தியாளர் சங்க செயலாளர் நஞ்சப்பன் கூறியதாவது: மஞ்சளுக்கு மஹாராஷ்டிரா மாநிலம் சாங்லி, ஆந்திரா மாநிலம் நிஜாமாபாத்தில் குவிண்டால் ரூ.9,500 வரை கிடைத்துள்ளது. ஆனால் ஈரோடு சந்தையில் மட்டும் ரூ. 6,500க்கு மேல் விலை உயராமல் இருப்பதற்கு காரணம் தெரியவில்லை. கடந்த சில ஆண்டுகளாகவே வறட்சியால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்தாண்டு ரூ.8,500 வரை தீபாவளி சீஸன் காலத்தில் விலை கிடைத்தது. இந்தாண்டும் அதே விலை கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## <u>விளைபொருட்கள் ரூ.9.70 லட்சத்துக்கு விற்பனை</u>

கோபி: கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் நடந்த ஏலத்தில், 6,500 தார்கள் வாழை வந்தது. கதளி ஒரு கிலோ ரூ.51.40, நேந்திரன் .45க்கும் விற்றது. செவ்வாழை தார் ரூ.800, ரொபஸ்டா, 525, தேன்வாழை, 525, ரஸ்தாளி, 550, மொந்தன், 400, பூவன், 450, பச்சைநாடான், 350க்கும் விற்றது. வாழைத்தார் ஒன்பது

லட்ச ரூபாய்க்கு ஏலம்போனது. திருப்பூர், ஊத்துக்குளி வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். ஏலத்துக்கு, 6,000 தேங்காய் விற்பனைக்கு வந்தது. ரூ.10.50 முதல், 17.80 வரை விற்றது. மொத்தம் ரூ.70 ஆயிரத்துக்கு விற்பனையானது.

## 12 பண்ணை மகளிர் குழுக்கள் தோட்டக்கலை துறையினரால் அமைப்பு

ஈரோடு: மாவட்டத்தில், 12 பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் பண்ணை மகளிர் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை இயக்குனர் சித்ர சேனன் தலைமை வகித்து பேசியதாவது: தோட்டக்கலை துறையில், 27 மாவட்டங்களில், 110 வட்டாரங்களில் பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்படும் என்று முதல்வர் அறிவித்து இருந்தார். இதன்படி தாளவாடி, டி.என் பாளையம், சத்தியமங்கலம், அந்தியூர், அம்மா பேட்டை, மொடக்குறிச்சி ஆகிய ஆறு வட்டாரங்களிலும், 12 பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பண்ணை மகளிருக்கு பயிற்சி வழங்கி உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு உதவிடுதலே இதன் நோக்கமாகும். 15 லிருந்து 20 மகளிரை கொண்டு அமைக்கப்படும் பண்ணை மகளிர் குழுக்கள் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். குழுவில் உள்ள பெண்களுக்கு ஒரு ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். திட்டம் மூலம் இரண்டு மடங்கு உற்பத்தியை பெருக்கி, மூன்று மடங்கு வருவாயை ஏற்படுத்தி தருவதாகும். துறை மூலம் நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் பொருட் களை மதிப்பு கூட்டு வித்தல் ஆகியவைகள் பயிற்சியாக வழங்க வேண்டும். பண்ணை மகளிர் குழுவினர் குறைந்தபட்சம், 10லிருந்து, 15 வகை காய்கறிகளை பயிரிட ஏற்பாடு செய்ய வேண்டும். தக்காளி, முருங்கை போன்ற பயிர்களை கண்டிப்பாக பயிர் செய்திட வேண்டும். பண்ணை மகளிர் குழுவினரின் நிலங்களில் மண் பரிசோதனைகள்

செய்யப்பட்டு அதிக விளைச்சல் தரும் காய்கறிகள் விதைகள் இவர் களுக்கு வழங்கப்படும். மாவட்டத்தில் பொதுமக்களின் தேவைக்கு ஏற்ப அதிகளவில் விற்பனையாகும் காய்கறிகளை இக்குழுக்கள் பயிரிட ஏற்பாடு செய்ய வேண்டும். தோட்டக்கலை துறையின் மூலம் பண்ணை மகளிர் குழுக்களுக்கு முக்கியத்துவம் தந்து செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்திலும் முன்னுரிமை அடிப்படையில் இவர்களுக்கு வழங்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கணேச மூர்த்தி, தோட்டக்கலை துறை அனைத்து உதவி இயக்குனர்மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

## <u>கோமாரி தடுப்பூசி போடும் பணிகள்</u>

கூடலூர் : "கூடலூர் பகுதியில் வரும் 21ம் தேதி வரை கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி நடக்கும்' என, தெரிவிக்கப் பட்டுள்ளது. மாநில அரசு சார்பில், கோமாரி நோயை கட்டுப்படுத்த கால்நடைகளுக்கு இலவச தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது. கூடலூர் பகுதியில் கால்நடை பாராமரிப்பு துறை சார்பில், கடந்த 1ம் தேதி முதல் இப்பணி நடந்து வருகிறது. கூடலூர் அரசு கால்நடை மருத்துவமனை உதவி இயக்குனர் கால்நடை டாக்டர் தயாசேகர் தலைமையில் ஆவின் கால்நடை டாக்டர் பிராபகரன், அரசு கால்நடை டாக்டர்கள் காளியப்பன், வினோத், பிரபு, வினோத்குமார், விஜயகுமார், பாரத்ஜோதி ஆகியோர் இப்பணிகளில் ஈடுபட்டனர். "இப்பணிகள் வரும் 21ம் தேதி வரை நடக்கும், விடுப்பட்ட கால்நடைகளுக்கு 22 முதல் 30ம் தேதி வரை கோமாரி தடுப்பூசி போடப்படும்' என, மருத்துவ குழுவினர் தெரிவித்தனர்.

## <u>கரூரில் திடீர் மழை</u>

கரூர்: கரூரில், நேற்று மாலை திடீரென மழை பெய்தது. கரூரில், சில நாட்களாக கோடை காலம் போல் வெப்பம் வாட்டியது. நேற்று காலையில் இருந்து, வெயில் சுட்டெரித்ததால், மக்கள் நடமாட முடியாத

நிலைக்கு தள்ளப்பட்டனர். நேற்று மாலை, 4.30 மணிக்கு திடீரென கருமேகங்கள் கரூரை சூழ்ந்து சிறிது நேரம் மழை பெய்தது. ரோட்டில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் தான் நனைந்ததே தவிர வேறு எந்த பலனும் இல்லை. இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "இந்த மழை எதற்கும் உதவாது. ரோட்டில் செல்பவர்களும், வாகனங்களும் நனைந்ததே தவிர, விவசாயத்துக்கோ, நீர்இருப்பு பெருகுவதற்கோ வாய்ப்பில்லை,' என்றனர்.

<u>பலத்த மழை</u>

கொடைக்கானல் : கொடைக்கானலில் நேற்று பகல் 1.30 மணிக்கு துவங்கிய மழை 3.30 மணி வரை நீடித்தது. போட் கிளப்பில் 18 மி.மீ., மழை பதிவாகியிருந்தது. அதிகபட்ச வெப்பநிலை 18 டிகிரி செல்சியசாகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 8 டிகிரி செல்சியசாகவும் இருந்தது. காற்றின் வேகம் 3 கி.மீ., ஆகவும், காற்றில் நிலவிய ஈரப்பதம் 71 சதவீதமாகவும் இருந்தது. ஓணம் பண்டிகை விடுமுறையையொட்டி, நேற்று கேரள சுற்றுலா பயணிகளின் வருகை அதிகளவில் இருந்தது. மழைக்கு முன்னர், ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏரியில் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். பிரையண்ட் பூங்காவில் சுற்றுலா பயணிகளின் வருகை குறைவாக இருந்தது.

**இன்றையவேளாண் செய்திகள்**

**மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடிக்கு கீழ் சரிந்தது**

மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர் மட்டம் 37 நாட்களுக்கு பிறகு 100 அடிகது கீழே சரிந்தது. காவிரியின் நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. நேற்று முன்தினம் காலை மேட்டூர் அணைகீகு வினாடிகது 12,033 கனஅடியாக இருந்த நீர் வரத்து நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 7,452 கனஅடியாக குறைந்தது. அணைகது நீர் வரத்து குறைந்து வரும் நிலையில் பாசனத்திற்கு திறககப்படும் நீரின் அளவு வினாடிகீகு 20 ஆயிரம் கனஅடியிலிருந்து 23 ஆயிரம் கனஅடியாக அதிகரிகீகப் பட்டுள்ளது. இதனால் நேற்று முன்தினம் 101.32 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் 1 அடி சரிந்து நேற்று காலை 100.32 அடியாக குறைந்திருந்தது. மாலையில் நீர்மட்டம் மேலும் சரிந்து 99.80 அடியாக இருந்தது. கடந்த மாதம் 8ம் தேதி மேட்டூர் அணையின் நீர் மட்டம் 100 அடியை எட்டியது. 37 நாளுக்கு பிறகு அணை யின் நீர்மட்டம் 100 அடிகது கீழே குறைந்தது. அணையின் நீர்மட்டம் 100 அடிகது கீழே குறைந்ததால், மேட்டூர் அணையின் 16 கண் பாலத்தில் போககுவரத்திற்கு மீண்டும் அனுமதிகக வேண்டும் என்று பொதுமககள் கோரிககை விடுத்துள்ளனர்.

**வேலூர் மாவட்டத்தில்விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில் கோரிக்கை உப்பு தண்ணீருக்கு ஏற்ற விதைகளை வழங்கவேண்டும்**

வேலூர், :வேலூர் மாவட்டத்தில் உப்பு தண்ணீருக்கு ஏற்ற விதைகளை வழங்கவேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில்

வலியுறுத்தினர்.வேலூர் வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் ஆர்டிஓ பட்டாபிராமன் தலைமையில் நேற்று நடந்தது. வேளாண்மை, மின்துறை, தோட்டக் கலைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு: விவசாயி: கடந்த காலங்களில் சாதிச்சான்று அட்டையில் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது வெறும் தாளில் வழங்கப்படுகிறது.அதிகாரி:பட்டா மாற்றுப் பணிகள் நடக்கிறது. எனவே இப்பணி முடிந்தவுடன் நிரந்தரமாக சாதிச்சான்றை அட்டையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயி: தாய் திட்டத்தின் மூலம் இலவச ஆடு, மாடுகள் பெற்றவர்களில் பல பேருக்கு கொட்டகை அமைத்து தரவில்லை. அதேபோல் ஆடு, மாடு வைத்திருந்து கொட்டகை இல்லாமல் இருந்தால் அவர்களுக்கும் கொட்டகை அமைத்து தரவேண்டும்.அதிகாரி: இந்த திட்டம் கண்டிப்பாக விரிவுபடுத்தப்படும். விவசாயி: பற்றாக்குறை காரணமாக ரேஷனில் உளுந்தம்பருப்பு, துவரம் பருப்பு வழங்கப்படுவதில்லை. 2 மாதத்திற்கு ஒருமுறை மட்டுமே சுழற்சி முறையில் பருப்பு வழங்கப்படுகிறது. எனவே மாதந்தோறும் அனைத்து வகை பருப்பும் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் குடோனுக்கு செல்லும் பருப்பு மூட்டையில் இருந்து வழியில் துளை போட்டு சிலர் அள்ளிவிடுகின்றனர். இதனால் வழியெங்கும் பருப்பு கொட்டியபடி கொண்டு செல்லப்படுகிறது. இந்த பருப்புகளை இதன் மூலம் திருடுகின்றனர்.அதிகாரி: பருப்பு மூட்டைகள் அளவு குறையாமல் குடோன்களில் எடுத்துச்செல்ல வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. பருப்பு மூட்டைகள் குடோன்களில் எடுத்துச் செல்லும் போது அதிகாரிகள் பார்வையிட வேண்டும்.விவசாயி: வேலூர் மாவட்டத்தில் உப்பு தண்ணீர் உள்ளதால் அதற்குரிய சிறப்பான விதைகளை தரவேண்டும். வேலூர் புதிய பஸ் நிலையத்திற்கு கிராமங் களில் இருந்து வரும் கல்லூரி மாணவிகளை மற்ற மாணவர்கள் மற்றும் வாலிபர்கள் உரசியபடி சென்று வம்பு செய்கின்றனர். பஸ்சிலும் கேலி,

கிண்டல் செய்கின்றனர். இதனை தட்டிக்கேட்கும் போது பிரச்னை ஏற்படுகிறது. எனவே கல்லூரி நேரத்தில் கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடவேண்டும்.அதிகாரி: புதிய பஸ் நிலையத்தில் நேரில் சென்று ஆய்வு செய்து எஸ்பி விஜயகுமாரிடம் இதுகுறித்து பேசுகிறேன்.விவசாயி: ஒரே பெயரில் எண்ணற்ற ரேஷன் கார்டுகளை சிலர் வைத்துள்ளனர். இது குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.அதிகாரி: உரிய அதிகாரி களுக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

## அட்மா திட்டம் விவசாயிகளுக்கு பண்ணைப்பள்ளி பயிற்சி

தேன்கனிக்கோட்டை,: கிருஷ்ணகிரி மாவட்டம் தளி வட்டார வேளாண்மை துறை சார்பில் 2014-15 அட்மா திட்டத்தின் கீழ் குஞ்செனஅக்ரஹாரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பண்ணைப்பள்ளி பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் 25 விவசாயிகளுக்கு துவரை நாற்று விட்டு பயிர் செய்யும் தொழில்நுட்டம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் தளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராமலிங்கம் கலந்து கொண்டு துவரை விதை நேர்த்தி செய்தல், பாலிதின் பைகளில் துவரை விதைநாற்று விட்டு 15 முதல் 20 நாட்களில் நடவு செய்தல். 30வது நாளில் நுணியை கிள்ளி விடுதல், அதன் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். பயிற்சி முடிவில் வட்டார தொழில்நுட்ப மோலாளர் ராஜ்குமார் நன்றி கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் ஸ்ரீநாத் செய்திருந்தார்.

## உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சிறு தானியங்கள் தொகுப்பு செயல் விளக்க முகாம்

தேன்கனிக்கோட்டை, : தேன்கனிக்கோட்டை அருகே தாவரகரை கிராமத்தில் தேசிய உணவு பாது காப்பு திட்டத்தின் கிழ் சிறு தானியங்கள் தொகுப்பு செயல் விளக்க முகாம் நடைபெற்றது. கூட்டத்தில் கெலமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராமலிங்கம் விவசாயிகளுக் கு இடுபொருட்களை வழங்கி பயன்படுத்தும் முறைகள்

குறித்து விளக்கி கூறினார். தேன்கனிக்கோட்டை ஜீவன் தொண்டு நிறுவன செயலாளர் ராஜசேகர் தானியங்களின் பயன்பாடு மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடையே எடுத்துரைத்தார். நிகழ்சியில் தாவரகரை ஊராட்சி மன்ற தலைவர் மாதேஷ், துணை தலைவர் வெங்கடேசன், உதவி வேளாண்மை அலுவ லர் பாண்டிசெல்வி, டிப்« பா மேலாளர் மாலதி, வேளாண்மை அலுவலர் கள் சிவானந்தம், முத்துசாமி மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## <u>சூரியகாந்தி விதைகளை விற்க வேளாண் பல்கலை அறிவுரை</u>

கோவை, : அறுவடை செய்த சூரியகாந்தி விதைகளை விவசாயிகள் உடனடியாக விற்கலாம் என வேளாண் பல்கலைக்கழகம் அறிவுறுத்தி யுள்ளது. வேளாண்மை பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டில் சாகுபடியாகும் சூரியகாந்தியின் நிலப்பரப்பில் 79 சதவீதம் மற்றும் உற்பத்தியில் 80 சதவீதம் பங்களிப்பை கரூர், திருச்சி, திண்டுக்கல், தூத்துக்குடி, தர்மபுரி, நாமக்கல், திருப்பூர் ஆகிய மாவட்டங்கள் அளிக்கிறது. சூரியகாந்தி கார்த்திகை (அக்-நவ), சித்திரை(ஏப்-மே) பட்டங்களில் பயிரிடப்படுகிறது. அதிகமான வரத்து மார்ச்-மே, ஜூன்-ஆகஸ்ட் மாதங்களில் காணப்படுகிறது. தற்போது, சித்திரை பட்டத்தில் (ஏப்-மே) விளைவித்த சூரியகாந்தி சந்தைக்கு வரத்தொடங்கியுள்ளது. தமிழகத்தில் வெள்ளகோவில், மூலனூர், கொடுமுடி ஆகியன முக்கிய சூரியகாந்தி சந்தைகளாகும். சன்பிரட், கங்கா காவேரி ஆகிய வீரிய சூரியகாந்தி விதைகள் பெருமளவில் பயிரிடப் படுகின்றன. இறவை சாகுபடியில், சராசரியாக ஏக்கருக்கு 1000 முதல் 1200 கிலோ வரை சூரியகாந்தி விதை மகசூல் எடுக்கலாம்.ஆனால், தண்ணீர் பற்றாக்குறை, பூச்சித்தாக்குதல் மற்றும் வேலை ஆட்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் இந்த பருவத்தில் சூரியகாந்தி விதை மகசூல் ஒரு ஏக்கருக்கு 600 முதல் 700 கிலோ வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சூரியகாந்தியின் சாகுபடி பரப்பு மற்றும்

மகசூல் குறைந்துள்ளதால் சந்தைக்கு வரும் வரத்தும் குறைந்து காணப்படுகிறது. வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் சார்பில், வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த 13 வருடங்களாக நிலவிய சூரியகாந்தி விதைகள் விலையின் பொருளாதார மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.ஆய்வு முடிவுகளின் படி, சூரியகாந்தி விதையின் பண்ணை விலை செப்டம்பர் 15 முதல் நவம்பர் மாதம் வரை கிலோ ஒன்றுக்கு ரூ.33-35 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விலையேற்றத்திற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதால் விவசாயிகள் அறுவடை செய்த சூரியகாந்தி விதைகளை உடனடியாக விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வரத்து குறைவால் வாழைத்தார் விலை அதிகரிப்பு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு நேற்று வாழைத்தார் வரத்து குறைவாக இருந்ததால் விலை அதிகரித்தது.பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் மற்றும் தேர்நிலை மார்க்கெட்டில் ஞாயிறு மற்றும் புதன் கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெறும். ஆனைமலை, கிணத்துக் கடவு, நெகமம், பொன்னாபுரம் மற்றும் திருச்சி, தூத்துக்குடி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பல்வேறு ரக வாழைத்தார்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இந்த ஆண்டில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வாழைத்தார் வரத்து ஓரளவு இருந்தது. இதனால் வாழைத் தார் குறைந்த விலைக்கு எலம் போனது. அந்நேரத்தில் செவ்வாழை அதிகபட்சமாக ரூ.600க்கும், மோரீஸ் ரூ.360க் கும், பூவந்தார் ரூ.450க்கும், கேரள ரஸ்தாளி ரூ.380க்கும், நேந்தி ரன்(ஒருகிலோ) ரூ.38க்கும் என குறைந்த விலைக்கு ஏலம்போனது.இந்நிலையில் கடந்த இரண்டு வாரமாக வாழைத்தார் வரத்து குறை வால் விலை இருமடங்காக உயர்ந்தது. நேற்று நடந்த ஏலத்தில் மிகக் குறைந்த அளவிலான வாழைத்தார்களே வந்ததால் விலை அதிகரித்தது. செவ்வாழை தார் ரூ.450 முதல் அதிகபட்சமாக

ரூ.900 வரையிலும் ஏலம் போனது. பூவந்தார் ரூ.450 முதல் ரூ.700 வரையிலும், கேரள ரஸ்தாளி ரூ.400 முதல் ரூ.600 வரையிலும், மோரீஸ் ரூ.350 முதல் ரூ.580 வரையிலும், நேந்திரன்(கிலோ) ரூ.55க்கும் என கூடுதல் விலைக்கு ஏலம்போனது.

**<u>ஆந்திரா, கேரளாவில் இருந்து டேம் மீன்கள் வரத்து அதிகரிப்பு</u>**

கோவை: ஆந்திரா, கேரளா மாநிலங்களில் இருந்து டேம் மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால், டேம் மீன்க் விலை ரூ.20 முதல் ரூ.40 வரை குறைந்துள்ளது. கோவை மாநகராட்சி மீன் மார்க்கெட்டுக்கு ராமேஸ்புரம், கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் இருந்து 100 வகையான கடல்மீன்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. சாதாரண நாட்களில் 1 முதல் 5 டன்னும், சனி, ஞாயிறுகளில் 10 முதல் 15 டன்னும் வரத்து உள்ளன. இந்நிலையில் கடந்த 4 மாதங்களாக மீனவர் ஸ்டிரைக், மீன் பிடி தடை உள்ளிட்ட காரணங்களால் கோவை மீன் மார்க்கெட்டுக்கு 300 முதல் 500 கிலோ அளவே மீன் வரத்து இருந்தது. இதனால், கடல் மீன்களின் விலையும் தொடர்ந்து உச்சத்தில் இருந்தது. வஞ்சிரம் கிலோ ரூ.800, செம்மீன் ரூ.600, வெள்ளை வாவல் ரூ.700 என விற்கப்பட்டன. இதனால், மீன் பிரியர்கள் விலை குறைவான டேம் மீன்களை வாங்கி சென்றனர். டேம் மீன்களின் தேவை அதிகரித்ததால் 1 மாதத்தில் அதன் விலையும் உயர்ந்தது. கிலோ ரூ.60க்கு விற்கப்பட்ட ரோகு, கட்லா, உழுவை, உள்ளிட்ட மீன்கள் ரூ.60 அதிகரித்து ரூ.120க்கும் விற்கப்பட்டன. இந்நிலையில் கடந்த மாதங்களில் ஆந்திரா, கேரளா மாநிலங்களில் பரவலாக பெய்த மழையால் மீன் இனப்பெருக்கம் அதிகரித்துள்ளது. இதன் எதிரொலியாக ஆந்திரா மாநிலம் விஜயவாடா, கேரள மாநிலம் கொச்சியில் இருந்து டேம் மீன்கள் வரத்து அதிகரித்துள்ளன. சராசரியாக கோவை மார்க்கெட்டுக்கு 2 முதல் 3 டன் டேம் மீன்கள் வருகின்றன.

இதனால், விலை குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் கிலோ ரூ.80க்கு விற்ற மத்தி ரூ.40 குறைந்து ரூ.40க்கும், ரூ.120க்கு விற்ற ரோகு, கட்லா, உழுவை மீன்கள் ரூ.70 குறைந்து ரூ.50க்கும் விற்கப்பட்டன.

## விவசாயம், தோட்டக்கலை கண்காட்சி

கோவை, : கோவை சிங்காநல்லூர் விஜயா கண்காட்சி வளாகத்தில் டிரேட் இண்டியா பேர்ஸ் அண்ட் எக்ஸிபிஸன் சார்பில் 4வது விவசாயம் மற்றும் தோட்டக்கலை கண்காட்சி கடந்த இரு நாட்களாக நடைபெற்று வருகிறது. இக்கண்காட்சியில், விவசாயம் மற்றும் தோட்டக்கலை சம்பந்தப்பட்ட அனைத்து விதமான தகவல்களுடன் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கருங்கோழி வளர்ப்பு, பலவண்ண ரோஜா செடிகள், பேட்டரி மூலம் இயங்கும் மினி லோடர் இயந்திரங்கள், போர்ஸ் நிறுவன டிராக்டர்கள், பயிர் மற்றும் தட்டு வெட்டும் இயந்திரங்கள், ஸ்பிரேயர்கள், தோட்டக்கலை கருவிகள், மாடியில் செடிகள் வளர்க்கும் முறை, சமையலறை கார்டன், தென்னங்கன்றுகள், அனைத்து விதமான விதைகள், மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக அரங்கு உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தென்னையை தாக்கும் வண்டுகளைக் கட்டுப்படுத்தும் கருவிகள் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. தமிழகம் மட்டுமின்றி கர்நாடாகா, கேரளா போன்ற பிற மாநிலங்களில் இருந்தும் விவசாயிகள், தொழில் முனைவோர் ஏராளமானோர் வந்து பார்த்தவண்ணம் உள்ளனர். விவசாயம் மற்றும் பயிர் வளர்ப்பு தொடர்பான பயனுள்ள பல்வேறு தகவல்களை தரும் இக்கண்காட்சியில். வேளாண்மை பல்கலைக்கழக அரங்கில் கிடைக்கும் தகவல்கள் பயனுள்ளதாக இருப்பதாகவும் பார்வையாளர்கள் தெரிவித்தனர். இக்கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறுகிறது.

## நெகமம் விற்பனை கூடத்தில் ஒரு மாதத்திற்கு பிறகு கொப்பரை ஏலம் துவக்கம்

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூட த்தில் நேற்று கொப்பரை ஏலம் நடைபெற்றது. நெகமம், காட்டம்பட்டி, ராசக்காபாளையம், சந்திராபுரம், சிறுகளந்தை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 10 விவசாயிகள் மொத்தம் 25 மூட்டைகளில் கொப்பரை கொண்டு வந்திருந்தனர். 12 மூட்டை முதல் தர கொப்பரை யாகவும், 13 மூட்டை இரண்டாம் தர கொப்பரையாகவும் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன. முதல் தர கொப்பரை ரூ.105.65 முதல் ரு.101.35 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ரூ.75.10 முதல் ரூ.101.35 வரை ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த ஒரு டன் கொப்பரை ரூ.72 ஆயிரத்து க்கு ஏலம் போனது. இதை 4 வியாபாரிகள் கொள் முதல் செய்தனர். கடந்த ஆகஸ்ட் மாதம் மழை பெய்யத் துவங்கியதால் கொப்பரை ஏலம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில் ஒரு மாதத்திற்கு பிறகு நேற்று மீண்டும் கொப்பரை ஏலம் நடைபெற்றது. ஆனால் விவசாயிகள் கொண்டுவந்த கொப் பரை அளவு குறைவாக இருந்தபோதிலும், கிலோவு க்கு ரூ. 5 முதல் ரூ. 8 வரை கூடுதலாக கிடைத்ததாக ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

## நீர்வள மேலாண்மை முகாம்

மேலூர், : அழகர்கோவில் அருகே கிடாரிபட்டி லதா மாதவன் பாலிடெக்னி க்கில் நீர்வள மேலாண் மை விழிப்புணர்வு முகாம் நடந்தது. கல்லூரி முதல்வர் தவ மணி வரவேற்றார். தேசிய நீர்வழி சாலை தொழில்நுட்ப திட்ட தலைவர் காம ராஜ், இஸ்ரோ விஞ்ஞானி சிவசுப்பிரமணியன், முன் னாள் வருமான வரித்துறை இணை ஆணையர்

மோகன்காந்தி, ஜெயக்குமார், சங்கரன்மூர்த்தி ஆகியோர் பேசினர். தேசிய நீர்வழி திட்டம் குறித்து காமராஜ் பேசுகை யில், “இந்தியாவில் உள்ள நதிகள் அனைத்தையும் இணைத்தால் விவசாயம், மின்சாரம் தயாரிப்புக்கு போதிய தண்ணீர் கிடைக் கும். குடிநீர் பிரச்னை தீர்க்கப்படும். 25 கோடி மக்களு க்கு வேலை வாய்ப்பு கிடை க்கும். நமது நாடு பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும்Õ என்றார். விஞ்ஞானி சிவசுப்பிரமணியன் பேசுகையில், “ஒவ்வொரு மாணவரும் நாட்டிற்காக பாடுபட வேண்டும், என்றார். பாலிடெக்னிக் இயக்குநர் சேதுபதி, துறைத் தலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். துணை முதல்வர் பிரபாகரன் நன்றி கூறினார். ‘விஷன் 2020 எக்கோ கிளப்’ மற்றும் வேலை வாய்ப்புத் துறை சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## <u>பெரியாறு அணை பாசனத்தில் ஒரு லட்சம் ஏக்கருக்கு தண்ணீர் திறக்கப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு</u>

மதுரை, : பெரியாறு பாசன ஒரு போக ஆயக்கட்டு, ஒரு லட்சம் ஏக்கர் பாசனத்துக்கு வரும் 15ம் தேதி முதல் தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். அணையில் தண்ணீர் இருந்தாலும், கண்மாய்கள் வறண்டு கிடப்பதால் அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்றனர்.முல்லை பெரியாறு அணையின் இருபோக ஆயக்கட்டில், 45 ஆயிரம் ஏக்கர் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையில் இருந்து கடந்த 5ந் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதையடுத்து விவசாயிகள் நாற்றுப்பாவி உழவுப் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். ஒரு போக ஆயக்கட்டு மதுரை மாவட்டம் மேலூர் பகுதியிலும், திருமங்கலம் பிரதான கால்வாய் பாசன பகுதியிலும் ஒரு லட்சம் ஏக்கர் உள்ளது. இப்பகுதி பாசனத்திற்காக செப்டம்பர் 15ந் தேதி அணைகளில் 6 ஆயிரம் மில்லியன் கன அடிக்கு

மேல் தண்ணீர் இருந்தால், திறப்பது வழக்கம். தற்போது பெரியாறு அணையில் 5 ஆயிரத்து 376 மில்லியன் கன அடியும், வைகை அணையில் 1,891 மில்லியன் கன அடியும் உள்ளது. எனவே 15ந் தேதி (நாளை மறுநாள்) முதல் பெரியாறு பிரதான கால்வாய் மற்றும் திருமங்கலம் கால்வாயில் ஒருபோகம் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இதற்காக பெரியாறு வைகை பாசன திட்டக்குழு தலைவர் முருகன் தலைமையில் விவசாயிகள் மதுரை மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்தனர். 15ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்படுமா? என்பது குறித்து அதிகாரிகளிடம் கேட்டபோது, “பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அணைகளில் தண்ணீர் இருப்பு 6 ஆயிரம் மில்லியன் கன அடிக்கு மேல் இருந்தாலும், ஆயக்கட்டு பகுதிகளில் போதிய மழையின்றி, கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன. இதனால் தயக்கம் ஏற்படுகிறது. ஆனாலும் மழையை நம்பி அணையை திறக்க அரசு உத்தரவிட்டால் திறக்கப்படும். விரைவில் திறக்க வாய்ப்புள்ளது. எந்த தேதி என்பதை அரசு தான் முடிவு செய்யும்“ என்றனர்.

## <u>மாநகரில் நேற்றிரவு மழை</u>

மதுரை, : மதுரையில் நேற்று மழை பெய்ததால் குளிர்ச்சியான சூழல் நிலவியது. மதுரை மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழை கடந்த மூன்று ஆண்டுகளாக பொய்த்துவிட்டது. இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை. கடந்த சில மாதங்களாக மதுரையில் பகல் நேரத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. கடந்த சில நாட்களாக பகலில் அக்னி நட்சத்திரம் போல் வெயில் கொளுத்தியது. நகரில் நிலவிய வெப்பத்தை தணிக்கும¢ வகையில், நேற்றிரவு திடீரென்று மழை பெய்தது. மாலை 6.30 மணி முதல் சுமார் 2 மணி நேரம் பெய்த மழையால் வெப்பத்தின் தாக்கம் குறைந்தது. மழை நீர் நகர சாலைகளில்

பெருக்கெடுத்து ஒடியது. தாழ்வான பகுதிகளில் குளம் போல் தேங்கி நின்றது. திருமங்கலம் உட்பட புறநகர் பகுதிகளிலும் மழை பெய்தது. மேலூர் பகுதியில் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்தது. அதன் அளவு வருமாறு: மேலூர்- 5 மி.மீ. புலிப்பட்டி- 47 மி.மீ. தணியாமங்கலம்- 42 மி.மீ. கள்ளந்திரி- 21 மி.மீ.

## மாவட்டத்தில் 1.57 லட்சம் பழ மரக்கன்றுகள் விநியோகம் கலெக்டர் தகவல்

ராமநாதபுரம், : நீர்வடிப் பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் ராமநாதபுரம் மாவட்டத்தில் 1.57 லட்சம் பழ மற்றும் மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்படவுள்ளது என கலெக்டர் தெரிவித்தார். ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் மூலம் பயனாளிகளுக்கு பழ மரக்கன்றுகள் வழங்குவது மற்றும் நடவு செய்வது குறித்து, செயல்விளக்க பயிற்சி ஆர்.எஸ்.மங்கலம் வட்டம் மேட்டு சோழந்தூர் அரசு தொடக்கப்பள்ளி வளாகத்தில் நடந்தது. கலெக்டர் நந்தகுமார் மரக்கன்றுகளை நடவு செய்து இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். தோட்டங்களில் நடவு செய்வதற்கு பயனாளிகளுக்கு பழ மரக்கன்றுகளை அவர் வழங்கினார். அவர் பேசுகையில், Ôஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் மூலம் மாவட்டத்தில் 1.57 லட்சம் மரம் மற்றும் பழ மரக்கன்றுகள் ராமநாதபுரம் மாவட்டத்தில் விநியோகம் செய்யப்படவுள்ளது. கிராமங்களில் நிலம் மற்றும் நீர் வளத்தை மேம்படுத்துவதில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. மரங்கள் வளர்ப்பதன் மூலம் கிராமமே பசுமையாக மாறும். மரம் கன்றுகள் நடவு செய்வதன் பொருட்டு நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன் மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. சுற்றுப்புற சூழல் மாசுபடுவதை தடுக்க இவை பெரிதும௶ உதவுகிறதுÕ என்றார்.மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்ட அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளார் கனகராஜன், துணை இயக்குனர் கமாலுதீன், விரிவாக்க அலுவலர்

ஜாய்லின் சோபியா, உதவிப் பொறியாளர் குமரேசன், திட்ட பொருளியலர் ஜெயசுதாகர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியிழ்ல் பங்கேற்றனர்.

## பாபநாசம் அருகே கோமாரி தடுப்பூசி முகாம்

பாபநாசம்,: பாபநாசம் அருகேயுள்ள பெருமாள் கோயில் ஊராட்சி வன்னியடியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இம்முகாமில் வீரமாங்குடி கால் நடை உதவி மருத்துவர் ராஜா, கால் நடை ஆய்வாளர் பா, உதவியாளர் கோபால் அடங்கிய குழுவினர் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசிகள் போட்டனர். இம்முகாமிற்கு சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான கால்நடை வளர்ப்போர் தங்கள் மாடுகளை கொண்டு வந்திருந்தனர். இதில் 128 கால் நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இம்முகாமில் பெருமாள் கோயில் ஊராட்சித் தலைவர் வன்னியடி ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## ஒரத்தநாடு அருகே கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்

ஒரத்தநாடு,: ஒரத்தநாடு அருகேயுள்ள தென்னமாநாட்டில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தர்மலிங்கம் தலைமை வகித் தார். இம்முகாமில்மேல உளூர் கால்நடை உதவி மருத்துவர் பேவாஷினி, கால்நடை உதவியாளர் திருநாவுக்கரசு அடங்கிய குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். இதில் நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை, பருவத்தில் உள்ள கால்நடைகளுக்கு கருவூட்டல், கன்றுகளுக்கு குடல் புண் மருந்து, சினை பார்த்தல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. இதில் சிறந்த கிடேரி கன்றுகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. முகாமில் தென்னமாநாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் ரெங்கராசு, துணைத் தலைவர் சூரியமூர்த்தி, ஊராட்சி உறுப்பினர்கள்,விவசாயிகள் கலந்துகொண்டனர்.

திருந்திய நெல் சாகுபடிக்கு நாற்றங்கால் தயாரிக்கும் முறை விவசாயிகளுக்கு விளக்கம்

சேதுபாவாசத்திரம், : திருந்திய நெல் சாகுபடி என்ற ஒற்றை நாற்று நடவு முறைக்கு நாற்றங்கால் தயார் செய்யும் முறை குறி த்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.சேதுபாவாசத்திரம் வட் டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவாசத்திரம் வட்ட ஈரம் கடைமடை பகுதிகளில் தற்போது சம்பா சாகுபடிக்கான நாற்றுவிடும் பணியில் துவங்கியுள்ளது. 14 நாட்களில் வாளிப்பான நாற்றுகளை பெற திருத்தி அமைக்கப்பட்ட பாய்நாற்றங்கால் முறையை பயன்படுத்த வேண்டும். வடிகால் வசதியுடன் நீர் ஆதரத்துக்கு அருகாமையில் நாற்றங்கால் அமைய வேண்டும். ஒரு ஏக்கர் நடவு செய்ய தேவை யான 3 கிலோ விதையை 40 சதுர மீட்டர் பரப்பு (1 சென்ட்) நாற்றங்காலில் விதைக்க வேண்டும். முன்ன தாக ஒரு மீட்டர் அகலம், 40 மீட்டர் வரை நீளம், 5 செமீ உயரம் கொண்ட மேட்டு பாத்திகள் அமைக்க வேண்டும். பாத்தியின் மேல் 300 கேஜ் கனமுள்ள வெள்ளை அல்லது கருப்பு பாலீத்தின் விரிப்பு அல்லது பாலீத்தின் உரச்சாக்குகளை விரிக்க வேண்டும். நீளம் மற்றும் அகல வாக்கில் 4 கட்டங்களாக தடுக்கப்பட்டு 1 மீட்டர் நீளம், 0.5 மீட்டர் அகலம், 4 செமீ உயரம் கொண்ட மரத்தாலான விதைப்பு சட்டம் தயார் செய்து அதனை பாலீத்தின் விரிப்புமேல் சரியாக சமன்பட வைக்க வேண்டும். 1 கிலோ வளமான வயல் மண்ணுடன் 1/2 கிலோ நன்கு தூள் செய்யப்பட்ட டிஏபி உரத்தை சேர்த்து விதைப்பு சட்டத்திற்குள் 3/4 அளவிற்கு நிரப்ப வேண்டும். அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியாவுடன் விதை நேர்த்தி செய்யப்பட்ட 3 கிலோ முளைகட்டிய விதையை 0.5 சதுர மீட்டர் சட்டத்துக்குள் 45 கிராம் என்ற அளவில் விதைத்து பின் மண்ணால் நன்கு மூடி விட வேண்டும். பின்னர் பூவாலியால் அடி வரை நனையும் அளவுக்கு தண் ணீர் தெளித்து சட்டத்தை வெளியில் எடுக்க வேண் டும். விதையை விதைத்த பின்

தென்னை ஓலை அல் லது வைக்கோலை கொண்டு மூடிவிட்டு 8 நாள் கழித்து அகற்றிவிட வேண்டும். பின்னர் 5 நாட்கள் வரை பூவாலியால் தண்ணீர் தெளித்த பின்னர் பாத்திகள் நனையும் வகையில் தண் ணீர் கட்ட வேண்டும். விதை த்த 9ம் நாள் 0.5 சதம் யூரியா கரைசல் (150 கிராம் யூரியாவிற்கு 30 லிட்டர் தண்ணீர் என்ற வீதத்தில்) பூவாலி மூலம் மாலை வேளையில் தெளிக்க வேண்டும். சரியாக 14வது நாளில் சிறிய சதுர சட்டத்துக்குள் உள்ள 12 முதல் 16 செமீ உயரம் உடைய 2 இலை கொண்ட இளம்நாற்றுகளை வேர் அறுபடாமல் எடுத்து குத்துக்கு 1 நாற்றாக வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு செடிக்கு 22.5 செமீ இடைவெளியில் சதுர மீட்டருக்கு 20 குத்துக்கள் இருக்குமாறு சதுர முறையில் நடவு செய்ய வேண்டும்.

## <u>பயறு வகைகளில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு பயிற்சி</u>

அரியலூர், : தா.பழூர் வட்டாரத்திற்கு உட்பட்ட சுத்தமல்லி கிராம விவசாயிகளுக்கு பயறு வகைகளில் அதக மகசூல் பெற பயிற்சி அளிக்கப்பட்டது. அரியலூர் மாவட்டம் தா.பழூர் வட்டார வேளாண்மைத்துறையின் சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பயறு இயக்கத்தின் கீழ் சுத்தமல்லி, காக்காபாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு, பயறு வகைகளில் அதிக மகசூல் பெற பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை வேளாண்மை அலுவலர் சுகந்தி தொடங்கி வைத்து, பயறுகளின் முக்கியத்துவத்தை பற்றியும், பயறு வகைகளில் அதிக மகசூல் பெற 2% டிஏபி கரைசல் தெளிப்பு பற்றிய வழிமுறைகளையும் விவசாயிகளிடம் தெரிவித்தார். கிரீடு வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜ்கலா, தொழில் நுட்ப வல்லுநர் ராஜாஜோஸ்லின், உமாச்சந்திரா ஆகியோர் விவசாய தொடர்புடைய கருத்துக்களை தெரிவித்தனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை, அட்மா திட்ட தொழில் நுட்ப வல்லுநர்கள் உஷா, வேளாண்மை உதவி அலுவலர் ஜோதி ஆகியோர் செய்து இருந்தனர்.

முடிவில், உதவி வேளாண்மை அலுவலர் சிவக்குமார் நன்றி கூறினார்.

## செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 17 டன் வெங்காயம் ரூ 2.2 லட்சத்துக்கு ஏலம்

பெரம்பலூர், : செட்டிகுளம் வெங்காய வணிகவளாகத்தில் கடந்த 11ம்தேதியன்று திறந்தமுறை ஏலம் நடைபெற்றது. இதில் அனுக்கூர், இருர், ஆலத்தூர், செட்டிகுளம், நாட்டார் மங்கலம், களரம் பட்டி, பாடாலூர், கூத்தூர், சிறுவயலூர், வெங்கனூர், பொம்மனப் பாடி கிராமங்களைச் சேர்ந்த 56 விவசாயிகள் விளைபொரு ளான சின்ன வெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற் பனை செய்தனர்.செட்டிகுளம், திண்டுக்கல், மயிலாடுதுறை, துறையூர், நாட்டார்மங்களம், சிறு கனூர், மற்றும் பாடாலூர் ஆகிய பகுதி களிலிருந்து வியாபாரிகள் என 16 நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் கொண்டுவந்திருந்த 316 மூட்டை அதாவது 17 ஆயிரத்து 316 கிலோ சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் மற்றும் விதை வெங்காய விவசாயிகள் ஏலத்தில் எடுத்தனர். இந்த ஏலத்தில் பழைய பட்டறை வெங் காயம் அதிகபட்சம் ரூ.11க்கும், புதிய வெங்காயம் கிலோ ஒன் றுக்கு அதிகபட்சமாக ரூ.23.50க்கும், சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ.13க்கும் விலை போனது. இதன் மூலம் ரூ.2 லட் சத்து 20 ஆயிரத்து 129க்கு விற்பனை நடைபெற்றது. இந்த வணிக வளாகத்தில் செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில் திறந்தமுறை ஏலம் நடத்தப்படுகிறது. விவசாயிகள் தங்களது வெங்காய விளைபொருளை வருகிற செவ்வாய்க்கிழமை (16ம்தேதி) கொண்டுவந்து விற்பனைசெய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என கலெக்ட தெரிவித்தார்.

## 1,056 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

அரியலூர் , : தா.பழூர் ஒன்றியம் இடங்கண்ணி ஊராட்சியில் தமி ழக அரசின் சிறப்பு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் செல்வபெருமாள்

தலைமை வகித்து முகாமை துவங்கி வைத்தார்.உதவி இயக்குனர் மருதராஜ், ஊராட்சித் தலைவர் ஆனந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை டாக்டர்கள் அறிவுச்செல்வன், வாசுகி ஆகி யோர் தலைமையில் மருத்துவ குழுவினர் 324 பசு, 110 கன்று என 434 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். இதற் கான ஏற்பாடுகளை, கால் நடை ஆய்வாளர் மார்பீன், கருணாநிதி, கால்நடை உதவியாளர் மாகலெட்சுமி ஆகியோர் செய்தனர். முடிவில் ஊராட்சி செயலா ளர் அசோக் நன்றி கூறினார்.ஜெயங்கொண்டம்: ஜெயங்கொண்டம் அருகில் உள்ள கூவத்துா் குடிகாடு கிராமத்தில் கால்நடைகளுக்கு கோமாரி தடுப் பூசி சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. பால்உற்பத்தியாளர் சங்க தலைவர் கலையரசன் தலைமை வகித் தார். கால் நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் மருதைராஜ் துவக்கி வைத் தார். பால் வளத்துறை பெருக்கு திட்ட மாவட்ட ஒருங்கினைப்பாளர் முருகானந்தம், குடிகாடு சங்க செயலாளர் செங்குட்டுவன் முன்னிலை வகித்தனர்.கால்நடை மருத்துவர்கள் கண்ணன், செந் தில், ஆய்வாளர்கள் தமி ழரசி, அர்ச்சுணன், உதவியாளர்கள் ஜெயசித்ரா, ஆனந்தநாயகி, உள்ளிட்ட மருத் துவ குழு வினர்சிகி ச்சை அளித்தனர். கோமாரி நோய் வராமல் தடுப்பதற் கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் கால் நடை வளர்ப்பவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது. முகாமில் 632 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

**<u>அரியலூர் மாவட்டத்தில் மானிய உதவியுடன் தீவனப்பயிர் அபிவிருத்தி விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் அரசு மானிய உதவி பெற்று தீவனப்பயிர் அபிவிருத்தி செய்து விவசாயிகள் பய ன்பெற அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் அழைப்பு விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு,

கால்நடைகளுக்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்க வேண்டும். கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவினத்தில் 70 விழுக்காடு, தீவன மற்றும் பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. கால்நடைகளின் பசுந்தீவனத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி உள்ளது. ஆகவே, தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும், கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையி லும் தமிழக அரசு கடந்த 3 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் கால்நடை துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய கீழ்கண்ட தீவனப்பயிர் சாகுபடி திட்ட ங்கள் செயல்படுத்தபடவுள்ளது.அதன்படி அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் தீவனப்பயிர் இறவையில் 0.25 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திட ரூ.2 ஆயிரம் மானியம் (100 சதம் மானியம்) மற்றும் மானாவரி யில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்திட ரூ.550 மானியமும், தெளிப்பு நீர்பாசன கருவிகள் நிறுவுவதற்கு விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரத்து 750 (75 சதம்) மானியத்திலும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அகத்தி மர வகை தீவன பயிர் சாகுபடி செய்திட 100 சதவீத மானியத்துடன் அகத்தி விதைகள் விநியோகிக்கப்பட்டு வரு கிறது. இதே போல் அசோலா திடல் அமைக்க ரூ.1,600 மானியம் (100 சதம் மானியம்) மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெறலாம். எனவே விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியைச் சார்ந்த கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். மேலும் விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ணப்பம் அளித்திடுமாறும் அரியலூர் கலெக்டர் சரவணவேல்ராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நேரடி நெல் விதைப்பு வயல்களில் களை கொல்லி மருந்து தெளிக்கும் பணி தீவிரம்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில், கீழணையில் தேக்கப்படும் தண்ணீரால் வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் பெற்று விவசாய பணிகள் நடைபெறுகிறது. கடந்த காலங்களில் மூன்று போகம் சாகுபடி நடத்த போதுமான தண்ணீர் கிடைத்தது. தற்போது மழை குறைந்ததாலும், காவிரியில் தண்ணீர் திறப்பதில் கர்நாடக அரசு அலட்சியம் காட்டுவதாலும், ஒரு போக சாகுபடியாக மாறி வருகிறது. ஒரு போக சாகுபடிக்கும், தண்ணீர் குறிப்பிட்ட காலத்தில் வருவதில்லை. இதை கருத்தில் கொண்டு விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு பணியில் ஈடுபடுகின்றனர். இந்த பகுதியில் நேரடி நெல் விதைப்பு அதிக பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. இதில் ஏற்பட்டுள்ள களைகளை சில விவசாயிகள் பெண் தொழிலாளர்களை கொண்டு அப்புறப்படுத்தி வருகின்றனர். சிலர் களை கொல்லிகளை பயன்படுத்தி அப்புறப்படுத்துகின்றனர். இதனால் களைகள் முற்றிலும் அழிக்கப்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர். தற்போது இந்த பகுதியில் நேரடி நெல் விதைப்பு வயல்களில் களைகளை அகற்றும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். காட்டுமன்னார் கோவில் பகுதிக்கு உட்பட்ட கண்டமங்கலம், குருங்குடி மேலும் பல்வேறு பகுதிகளில் கைதெளிப்பான் மூலம் களை கொல்லிகளை தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## குமரி மாவட்டத்தில் தேசிய வேளாண் காப்பீடு திட்டம் தொடக்கம்

நாகர்கோவில், :மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் மேம்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் குமரி மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நெல்பயிரிடும் விவசாயிகள் தங்கள் விருப்பப்படி இக்காப்பீட்டு திட்டத்தில் இணைந்து கொள்ளலாம். பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேருவோர் அரசு மானியம் பெறலாம். அனைத்து விதமான தவிர்க்க இயலாத இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல்

இழப்புகளுக்கு பகுதி வாரியான அடிப்படையில் இத்திட்டம் காப்பீடு வழங்குகிறது. குத்தகைதாரர்கள் உள்பட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். திட்ட அறிமுக நிகழ்ச்சியை குமரி மாவட்ட பாசனசபை சேர்மன் வின்ஸ்ஆன்றோ தலைமை வகித்து கடன் பெறாத விவசாயிகளுக்கு விண்ணப்பங்களை வழங்கி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் வீகேர் டிரஸ்ட் சுப்பிரமணி யன் வரவேற்றார். மாஸ்டர் டிரஸ்ட் இயக்குநர் நயினார் குமரி மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலவாரிய தலைவர் மரிய ஸ்டீபன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**<u>பட்டு வளர்ப்பு விவசாயிகள் கருத்தரங்கம்</u>**

சின்னமனூர், சின்னமனூர் அருகே எல்லப்பட்டி சமுதாயக்கூடத்தில் தேனி மாவட்ட பட்டு வளர்ச்சித்துறை சார்பில் பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கான கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கிற்கு தேனி மாவட்ட உதவி இயக்குனர் ஆல்பர்ட் தலைமை வகித்தார். சின்னமனூர் வேளாண்மைத்துறை அதிகாரி சங்கர் முன்னிலை வகித்தனர். பட்டு வளர்ப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம் வரவேற்றார். கருத்தரங்கில் பட்டு வளர்ச்சித்துறையில் அரசு நலத்திட்டங்கள், பட்டு பூச்சிகளின் உணவிற்காக வளர்க்கப்படும் மல்பரி பயிர் வளர்த்தால் கிடைக்கும் வருமானம் குறித்து விளக்கப்பட்டது. மேலும் விவசாயிகள் பட்டு வளர்ப்பதற்கு ஏக்கருக்கு ரூ.10,500 மானியம், குடில் அமைப்பதற்கு 1,500 அடிக்கு ரூ.8,250 மானியம் வழங்குதல், சொட்டுநீர் பாசனம் அமைக்க 5 ஏக்கருக்கு ரூ.22,500 மானியமாக வழங்கப்படுவது குறித்து விளக்கப்பட்டது. கூட்டத்தில் எல்லப்பட்டி கிராம கவுன்சிலர்கள் ஆதிநாராயணன், மேகலா மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். பட்டுதுறை ஆய்வாளர்கள் பழனிச்சாமி, பாண்டியம்மாள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**<u>விவசாய கண்காட்சி</u>**

கொள்ளிடம், : நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள மாதானம்

கிராமத்தில், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக, வேளாண்புல இறுதியாண்டு மாணவிகளின் சார்பில் விவசாய கண்காட்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டுறவு வங்கி தலைவர் உத்திராபதி தலைமை வகித்தார். மாணவி ரேவதி வரவேற்றார். உதவிப் பேராசிரியர்கள் சண்முகநாதன், சுஜய்வேல், வட்டார வேளாண் அலுவலர் கலிய பெருமாள், ஊராட்சி தலைவர் குமார், கல்விக்குழுத் தலைவர் ஆனந்த் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக தனி அலுவலர் ராதாகிருஷ்ணன் கண்காட்சியை துவக்கி வைத்தார். மண்புழு உரம் தயாரித்தல், இயற்கை உரம் தயாரித்தல், மண்மாதிரி எடுக்கும் முறை, நெல்நாற்றங்கால் அமைத்தல், தோட்டப்பயிர் சாகுபடி முதலானவை குறித்த காண்காட்சிகள் இடம் பெற்றிருந்தன.

## <u>நோய்த் தாக்குதலில் இருந்து கறவை மாடுகளை காப்பது எப்படி? விஞ்ஞானிகள் செயல்</u>

ஆலங்குடி, : நோய்த் தாக்குதலில் இருந்து கறவை மாடுகளை காப்பது எப்படி? என்பது குறித்து புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் விஞ்ஞானிகள் செயல் விளக்கம் அளித்தனர்.கறவை மாடுகளில் நோய் பராமரிப்பு மற்றும் தடுப்பூசி முறைகள் குறித்த செயல் விளக்க பயிற்சி முகாம் வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெற்றது. முகாமைத் துவக்கி வைத்த மையத்தின் தலைவரான பேராசிரியர் ஞானமலர் பேசியதாவது: மாடுகளுக்கும் ஊட்டச்சத்து மிக்க தீவனங்கள் அளித்து உரிய காலத்தில் தேவையான தடுப்பூசி போட்டு கொடிய நோய்களில் இருந்து பாதுகாக்க வேண்டும். கறவை மாடுகளின் பராமரிப்பு கன்று பருவம் முதற்கொண்டே தொடங்க வேண்டும். பிறந்த கன்றுகளுக்கு 2 முதல் 2.5 லிட்டர் வரை சீம்பால் அளித்தல் நோய் எதிர்ப்பு திறன் பல மடங்கு அதிகரிக்கும். மேலும் வளர்ந்த கன்றுகள் அல்லது கறவை மாடுகளுக்கு டானுவாஸ் தாது உப்பு கலவையை 3050 கிராம் ஒரு மாட்டுக்கு தினமும் கொடுத்தால்

பால் உற்பத்தியை அதிகரிக்கலாம். வைக்கோல் அதிக விலை மற்றும் அதன் தட்டுப்பாடுகளை குறைக்க தீவன வங்கி மற்றும் அசோலாவை வளர்த்து பயன்பெறலாம் என்றார்.ஒருங்கிணைப்பாளரான உதவிப் பேராசிரியர் நூர்ஜஹான் ஹனீப், கறவை மாடுகளின் தீவன மேலாண்மை, சீம்பால் கொடுத்தலின் முக்கியத்துவம், டானுவாஸ் தாது உப்பு கலவை, சுத்தமான பால் உற்பத்தி முறை மற்றும் தீவனம் குறித்து விளக்கிக் கூறி பயிற்சி அளித்தார். கால்நடை பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மைய தலைவர் டாக்டர் ரிட்சர்டு ஜெகதீசன், கறவை மாடுகள் வாங்குவதற்கு முன் கடைபிடிக்க வேண்டிய உத்திகள், பராமரிப்பு முறைகள், முக்கிய நோய்களான கோமாரி நோய், வாய் மற்றும் கால்ப்புண் நோய். அடைப்பான் நோய் மற்றும் சப்பை நோய் அதன் அறிகுறிகள், சுகாதார முறைகள் மற்றும் தடுப்பூசி போடும் முறை, கால அட்டவணை பற்றி விவரமாக எடுத்துரைத்தார். மேலும் தடுப்பூசி போடுவதால் பால் உற்பத்தி குறையாது என்பதால், தகுந்த நேரங்களில் உரிய தடுப்பூசிகள் போட்டு தங்கள் கறவை மாடுகளை பாதுகாக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். முகாமில் பங்கேற்ற கால்நடை விவசாயிகளுக்கு வம்பன் கால்நடை பண்ணையில், நேரடியாக செயல் விளக்கம் அளிக்கப்பட்டதோடு, அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமாக பதிலளிக்கப்பட்டது. மேலும் கோமாரி நோய் தடுப்பு மற்றும் கறவை மாடுகள் பராமரிப்பு பற்றிய கையேடுகள் வழங்கப்பட்டன.

**<u>செடி முருங்கையில் பழ ஈ தாக்குதல் கட்டுப்படுத்த வழிகாட்டல்</u>**

கடலூர்,: செடி முருங்கையில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் பழ ஈ தாக்குதலை உரிய பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து கடலூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.செடி முருங்கை பயிரிடும் பகுதிகளில் பழ ஈ தாக்குதல் அதிகமாக இருக்கும். பழ ஈக்கள் சிறியதாகவும், மஞ்சள் நிறமாகவும் சிவந்த கண்களுடன் இருக்கும். இந்த

ஈக்கள் காய்களிலுள்ள நீண்ட பள்ளங்களில் முட்டைகளை இடுகின்றன. 2,3 நாட்களில் வெளிவரும் கால்கள் இல்லாத வெண்மை நிற புழுக்கள் திசுக்களைச் சாப்பிடும். மிகவும் பாதிக்கப்பட்ட காய்களிலிருந்து நாள டைவில் பிசின் போன்ற திரவம் வடியும். காய்களில் பிளவுகளிலிருந்து துர்நாற்றம் வீசும். 7 முதல் 10 நாட்கள் வரை வளர்ந்த புழுக்கள் காய்களி லிருந்து நிலத்தில் விழுந்து கூட்டுப் புழுக்களாக மாறி அடுத்து காய்க்கும் பருவம் வரை நிலத்தில் உறக்க நிலையில் இருக்கும். கூட்டுப்புழுக்கள் தாய் ஈக்களாக மாறி மீண்டும் சேதத்தை ஏற்படுத்தி வாழ்க்கை சுழற்சியைத் தொடங்கும்.இந்த பூச்சிகளின் சேதத்தை குறைக்க செப்டம்பர், அக்டோபர் மாதத்திற்குள் விதைப்பு செய்வது நல்லது. இதற்குப் பிறகு விதைக்கும் போது இதன் தாக்குதல் அதிக அளவில் காணப்படும். பாதிக்கப்பட்ட பிஞ்சுகளை அல்லது காய் களை சேகரித்து மண்ணில் புதைத்தோ அல்லது நன்கு தீயிட்டோ எரித்து விட வேண்டும். மண்ணில் கூட்டுப் புழுக்களை வெளிக் கொண்டுவர 2, 3 முறை உழவு செய்து காய விட வேண்டும். காய்களின் மீது ஈக்கள் அமர்ந்து முட்டை யிடுவதைத் தடுக்க 3 சதம் வேப்ப எண்ணெய் கரைசல் தெளிக்க வேண்டும். பிஞ்சுகள் உருவான 20 முதல் 30 நாள் இருக்கும் போது ஒரு லிட்டர் நீரில் 2 மிலி டைக்குளோர்வாஸ் அல்லது 2 மிலிபெப்ரோனில் அல்லது 2 மிலி பென்தோயேட் என்ற அளவில் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறு 15 நாள் இடைவெளியில் நன்கு தெளிக்க வேண்டும். மருந்து தெளிப்பதற்கு முன்பு காய்களை பறித்து விட வேண்டும். மருந்து தெளித்த பின் 10 நாட்களுக்கு காய்களை பறிக்க கூடாது. எனவே முருங்கை சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த முறைகளை கையாண்டு பழ ஈ தாக்குதலை உரிய முறையில் கட்டுப்படுத்துமாறு கடலூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

**சொட்டு நீர் பாசன முறையில் அதிக மகசூல் பெறலாம் பயிற்சி முகாமில் தகவல்**

தோகைமலை,: சொட்டு நீர் பாசன முறை யில் பயன்படுத்தினால் அதிக மகசூல் பெற முடியும் என்று விவசாயிகளுக்கான பயிற்சி முகாமில் அறிவுறுத்தப்பட்டது. தோகைமலை ஒன்றியம், பாளையத்தான் தோட்டம் மற்றும் திருமுடி தோட்டம் ஆகிய பகுதிகளில் சிநேகிதி நிறுவனம் மற்றும் நபார்டு சார்பில் அறிவியல் சார்ந்த முறையில் காய்கறிகள் சாகுபடி மற்றும் தேனீ வளர்ப்பு பற்றிய 8 நாள் பயிற்சி முகாம் நடந்தது. சிநேகிதி நிறுவன மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோமளா தலைமை வகித் தார். இம்முகாமில் நபார்டு உதவி பொது மேலாளர் பார்த்திபன் பேசும்போது; தற்போது காவிரி மற்றும் கட்டளைமேட்டு வாய்க்கால்களில் நீர் வரத்து உள்ளது. இதை பயன்படுத்தி விவசாயிகள் நெல், கரும்பு, வாழை, பூக்கள் காய்கறிகள் உட்பட்ட சாகுபடிகளை அந்தந்த பகுதிகளுக்கேற்ப தேர்வு செய்து சாகுபடி செய்து வருகின்றனர். விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி பயன்பெற வேண்டும். குறிப்பாக சொட்டு நீர் பாசன முறையில் பயன்படுத்தினால் அதிக மகசூல் பெற முடியும். ஆண்டு முழுவதும் நிலையான குறைந்த நீர் தேவைப்படும் காய்கறி சாகுபடியை அதிக அள வில் செய்து பயன் பெற முடியும். இதற்கு உரிய தொழில் நுட்பங்களை அறிந்து அதிக லாபம் பெற லாம். மேலும் கூடுதல் வருமானம் தரும் தொழிலாக தேனீ வளர்க்கலாம். மேலும் விவசாயிகள் வங்கியில் பெற்ற கடன்களை உரிய நேரத்தில், உரிய தவணைகளில் செலுத்திட வேண்டும் இவ்வாறு அவர் பேசினார். இப்பயிற்சியின் ஒரு பகுதியாக வேளாண் அறிவியல் மைய பண்ணை மேலாளர் ஸ்ரீதர் மற்றும் புதுக்கோட்டை பானு தேனீ வளர்ப்பு பண்ணை இயக்குநர் தமிழ்செல்வன் ஆகியோர் தேனீக்களின் குணங்கள், ராணி தேனீ, வேலைக்கார தேனீ செயல்பாடுகள், மகரந்தச் சேர் க்கை, மருத்துவ குண முடைய தேன் சேகரிப்பு, மதிப்பூட்டப்பட்ட முறையில் தேன் விற்பனை உட்பட பல்வேறு தொழில் நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்தனர். சரஸ்வதி வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் டாக்டர்

திரவியம், மனைகள் துறை வல்லுனர் டாக்டர் மாலதி, வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன், முன்னோடி விவசாயிகள் மற்றும் உழவர் மன்றத் தலைவர்கள், நெய்தலூர் செல்லமுத்து, கண்ணதாசன், முதலைப்பட்டி அர்ஜுனன், நேரு இளைஞர் நற்பணி மன்ற தலைவர் மற்றும் பயிற்றுநர் ஆனந்தராஜ், காய்கறி சாகுபடி முன்னோடி விவசாயிகள் சங்கப்பிள்ளை, கோவிந்தராஜ், சிநேகிதி நிறுவன மேலாளர் வடிவேல், இணை இயக்குநர் சத்தியா, 30 மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்ட னர்.

**நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் கால்நடைகளுக்கு இலவச தடுப்பூசி 20ம் தேதி வரை போடப்படுகிறது**

நாமகிரிப்பேட்டை, : கால்நடை பாரமரிப்பு து ற சார்பில் கால்நடைகளு க்கு கால் நோய் மற்றும் கோமாரி கட்டுபடுத்தும் திட்டத்தின் கீழ் அனைத்து கால்நடைகளு க்கு இலவசமாக தடுப் பூசி போ டப்பட்டு வரு கிறது. நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை வட் டாரத்தில் கடந்த மூன்று நாட்களாக வடுகமுனியப்ப ம் பாளையம், பெருமாகவு ண்டம் பாளையம், ஆர். புதுப்பட்டி, மூலப்பள்ளி பட்டி, பெரப்பன்ஞ்சோ லை, முள்ளுக்குறிச்சி, மூலக்குறிச்சி ஆகிய பகுதிகளில் இலவச தடுப்பூசி போடப்பட்டது.இன்று (13ம் தேதி)ஆயில்பட்டி, 14ம் தேதி நாவல்பட்டி, 15ம் தேதி ஜேடர்பாளை யம், 16ம் தேதி பச்சுடையம்பாளை யம், 17ம் தேதி தொ ப்பப்பட்டி, 18ம் தேதி திம்ம நாயக்கன்பட்டி, 19ம் தேதி மத்துருட்டு, 20ம் தேதி கார்கூடல்பட்டி, 21ம் தேதி நா ரைகிணறு ஆகிய பகுதிகளி ல் தடுப்பூசி முகாம் நடக்கிறது.

## இன்றைய வேளாண் செய்திகள்

## மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

மேட்டூர், மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக கடந்த ஜூலை மாதம் முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இவ்வாறு திறந்து விடப்படும் தண்ணீர் பாசனத்தின் தேவைக்கு ஏற்றவாறு அதிகரித்தோ, குறைத்தோ திறந்து விடப்பட்டு வருகிறது. கடந்த வாரம் முதல் அணையில் இருந்து பாசன தேவைக்காக வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. இந்த நிலையில், காவிரி டெல்டா பாசன பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதால் தற்போது பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீரின் தேவையின் அளவு வினாடிக்கு 23 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அணைக்கு நீர் வரத்து படிப்படியாக குறைந்து கொண்டே வரும்நிலையில், அணையில் இருந்து பாசன தேவைக்காக திறக்கப்படும் தண்ணீரின் அளவு மென்மேலும் அதிகரித்துக்கொண்டே வருவதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 100.32 அடியாக இருந்தது.

## பயிர் காப்பீட்டு தொகை வழங்கப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

மீன்சுருட்டி, ஜெயங்கொண்டம் ஒன்றியத்தை சேர்ந்த விவசாயிகள் கடந்த 2011–12–ம் ஆண்டு பயிர் காப்பீட்டு தொகையை உரிய ஆவணங் களுடன் வேளாண் துறை மூலம், ஏக்கர் ஒன்றுக்கு ரூ.200 வீதம் செலுத்தினார்கள். ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் மட்டும் சுமார் ரூ.50

லட்சம் வரை பிரிமியத்தொகை செலுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள பிற ஒன்றியங்களில் வானிலை பயிர் காப்பீடு செய்து பணம் செலுத்திய விவசாயிகளுக்கு காப்பீடு நிறுவனம் காப்பீடு தொகை பெறுவதற்குரிய அனுமதியை வழங்கியுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் பிற ஒன்றியங்களை காட்டிலும் ஜெயங்கொண்டத்தில் கூடுதல் மழை பெய்துள்ளது என்று காரணம் காட்டி, வானிலை காப்பீட்டு தொகை வழங்க மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் பிற ஒன்றியங்களை விடவும் ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் போதிய மழையின்மையால் அனைத்து ஏரி, குளங்கள் போன்ற நீர்நிலைகள் 30 சதவீதம் அளவு கூட நிரம்பவில்லை. எனவே ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் உள்ள மானாவாரி விவசாயிகளில் பயிர் காப்பீடு செய்தவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று இப்பகுதியில் உள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## <u>விவசாயத்தில் பெண்கள் பங்கேற்கும் வகையில் 28 பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு குழுக்கள்</u>




விவசாயத்தில் பெண்கள் பங்கேற்கும் வகையில், திண்டுக்கல் மாவட்டத்தில் 28 அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. பண்ணை மகளிர் குழுக்கள் தமிழ்நாடு அரசு உணவு தானிய உற்பத்தியை பெருக்கும் வகையில் வேளாண்மை துறைக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. விவசாயத்தில் நிலத்தின் தன்மைக்கு ஏற்ற பயிர்களை சாகுபடி செய்து, அதிக லாபம் பெறும் வகையில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பெண்களுக்கு ஆர்வத்தை

தூண்டி, விவசாயத்தில் பங்கெடுக்க வைக்கும் வகையில் அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு குழுக்களை அமைக்கும்படி முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் குழுக்கள் அமைக்கும் பணி நடக்கிறது. 28 குழுக்கள் அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு குழுக்கள் அமைக்கும் பணி முழுவீச்சில் நடக்கிறது. இந்த திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தலா 2 குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இதில் ஒவ்வொரு குழுவிலும் 20 பேர் முதல் 25 பேர் வரைஇடம்பெற்றிருப் பார் கள்.இதில் வேளாண்மை துறை சார்பில் 20 குழுக்களும், தோட்டக்கலை துறை சார்பில் 8 குழுக்களும் என மாவட்டம் முழுவதும் மொத்தம் 28 குழுக்கள் அமைக்கப்பட இருக்கின்றன. இந்த குழுவில் குறைந்தபட்சம் 1 ஏக்கர் விவசாய நிலம் வைத்துள்ளவர்கள் சேர்க்கப்பட உள்ளன. பயிற்சிகள்-நிதிஉதவி இந்த குழுவில் சேரும் பெண்களுக்கு விவசாய மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் செய்வதற்கு தேவையான நவீன பயிற்சிகள் மற்றும் கடன்உதவி போன்றவை வழங்கப்பட இருக்கிறது. இதன் மூலம் உணவு தானிய உற்பத்தி மட்டுமின்றி விவசாயம் சார்ந்த தொழிலும் வளர்ச்சி அடையும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு குழுக்கள் அமைப்பது தொடர்பாக வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கள், தோட்டக்கலைதுறை துணை இயக்குனர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு உள்ளது.

**கோபி அருகே கடும் வறட்சியால் பண்ணை குட்டை அமைத்து பயிர் தொழிலில் ஈடுபடும் விவசாயிகள்**



கோபிசெட்டிபாளையம், கோபி அருகே கடும் வறட்சியால் பண்ணை குட்டை அமைத்து விவசாயிகள் பயிர்த்தொழிலில் ஈடுபடுகிறார்கள்.

வறட்சி

ஈரோடு மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக வறட்சி நிலவி வருகிறது. தண்ணீர் பற்றாக்குறையால் 70 சதவீதத்திற்கும் மேல் விவசாயம் பாதிக்கப்பட்டு உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் ஆதாரமாக பவானிசாகர் அணை விளங்குகிறது. பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி, தடப்பள்ளி–அரக்கன்கோட்டை, காலிங்கராயன் ஆகிய வாய்க்கால்களில் திறந்துவிடப்படும் தண்ணீர் மூலம் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த வாய்க்கால் பாசனங்களில் ஆண்டுதோறும் 2 போகத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்படும். ஆனால் வறட்சி காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக ஒரு போகத்திற்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.

வாய்க்கால் பாசனம் இல்லாத மானாவாரி நிலங்களில் விவசாயிகள் கிணற்று பாசனத்தை பயன்படுத்தி விவசாயம் செய்து வந்தனர். நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததையொட்டி கிணறுகள் தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது.

பண்ணை குட்டை

கடுமையான வறட்சியால் கோபிசெட்டிபாளையம் அருகே வினோபா நகர், கொங்கர்பாளையம், பங்களாப்புதூர், கணக்கம்பாளையம்,

புஞ்சைதுறையம்பாளையம், நம்பியூர், கெட்டிச்செவியூர் உள்பட பல்வேறு இடங்களில் விவசாயிகள் ஆழ்துளை கிணற்று பாசனத்தை பயன்படுத்தி வருகிறார்கள். ஆழ்துளை கிணற்றில் இருந்து பெறப்படும் தண்ணீரை நேரடியாக விவசாய நிலங்களுக்கு செலுத்துவதில் கூடுதல் தண்ணீர் செலவாகிறது. மேலும் மின்சார செலவும் அதிகரிக்கிறது. எனவே விவசாயிகள் தங்களது நிலங்களில் பண்ணை குட்டை அமைத்து, அதன்மூலம் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுகிறார்கள்.

ஆழ்துளை கிணற்றில் இருந்து குழாய் வழியாக பண்ணை குட்டையில் தண்ணீர் நிரப்பப்படுகிறது. பின்னர் குட்டையில் சேகரிக்கப்பட்டு உள்ள தண்ணீர் விவசாய நிலங்களுக்கு பாய்ச்சப்படுகிறது.

ரூ.2 லட்சம்

கோபிசெட்டிபாளையம் அருகே கொங்கர்பாளையத்தில் விவசாயி அன்னக்கொடி என்பவர் ரூ.2 லட்சம் செலவில் பண்ணை குட்டை அமைத்து உள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:–

குண்டேரிப்பள்ளம் அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் மூலம் கொங்கர்பாளையம், வினோபாநகர், வாணிப்புத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக அணைக்கு நீர்வரத்து இல்லை. இதனால் அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. அதைத்தொடர்ந்து ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் செய்து வருகிறோம். எங்கள் பகுதியில் நிலக்கடலை, வாழை, கரும்பு, வெங்காயம் ஆகிய பயிர்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது.

ஆழ்துளை கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து நேரடியாக விவசாய நிலங்களில் பாய்ச்ச முடிவதில்லை. இதற்காக கூடுதல் தண்ணீர் செலவாகிறது. எனவே நாங்கள் பண்ணை குட்டை அமைத்து உள்ளோம். ஆழ்துளை கிணறு அமைத்து பண்ணை குட்டை அமைக்க சுமார் ரூ.2 லட்சம் செலவானது. பண்ணை குட்டை அமைக்கப்படுவதால் தண்ணீர் செலவு குறைகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## அனைத்து பாசன பகுதிகளுக்கும் தடையின்றி தண்ணீர் செல்ல நடவடிக்கை



நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து பாசன பகுதிகளுக்கும் தடையின்றி தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுபணித்துறை அதிகாரிகளுக்கு, கலெக்டர் முனுசாமி அறிவுரை வழங்கினார். கலெக்டர்ஆய்வு நாகை மாவட்டம் கீழ்வேளூர், கீழையூர், தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் ஒன்றிய பகுதிகளில் விவசாயத்திற்கு தண்ணீர் தங்குதடையின்றி செல்கிறதா? என்பது குறித்து நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். நாகை மாவட்டம் விழுந்தமாவடி மின் இறைவை பாசன திட்டம், தென்னடார் மின் இறைவை பாசனத்திட்டம், உம்பளச்சேரி மின் இறைவை பாசன திட்டம், வளவனார் மின் இறைவை பாசன திட்டம் உள்ளிட்ட இறைவை பாசன திட்டத்தின் கீழ் பயன்பெறும் கிராமங்களில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பாசன பரப்பு பகுதிகளையும், வெண்மனச்சேரி, சீராவட்டம், மேலப்பிடாகை, ஆலங்குடி, மணக்குடி, தலைஞாயிறு, ஓரடியம்பலம், வாட்டாக்குடி, பிராந்தியங்கரை, வடமழை, மணக்காடு, தாணிக்கோட்டகம், ஏர்வைக்காடு உள்ளிட்ட பகுதிகளில் விளை நிலங்களையும், வடிகால் வாய்கால்களையும் கலெக்டர் முனுசாமி பார்வையிட்டுஆய்வுசெய்தார். மின் இறைவை பாசன திட்டம் பின்னர் இதுகுறித்து கலெக்டர் முனுசாமி கூறியதாவது:- ஏர்வைக்காடு கடைமடை இயக்கு அணையில் இருந்து விழுந்தமாவடி வரையிலான காவிரி தெண்கொண்டனார் வாய்க்காலில் இருந்து தண்ணீர் பெறப்பட்டு

விழுந்தமாவடி, காமேஸ்வரம் கிராமங்களில் சுமார் 1,600 ஏக்கர் பாசன பரப்பிற்கு விழுந்தமாவடி மின் இறைவை பாசன திட்டத்தின் கீழும், தாணிக்கோட்டகத்தில் இருந்து தென்னடார் வரையிலான முள்ளியார் வாய்காலில் இருந்து தண்ணீர் பெறப்பட்டு தென்னடார் கிராமத்தில் சுமார் 996 ஏக்கர் பாசன பரப்பிற்கு தென்னடார் மின் இறைவை பாசன திட்டத்தின்கீழும், உம்பளச்சேரி கிராமத்தில் அடப்பார் நீர் வழங்கும் வாய்க்காலில் இருந்து தண்ணீர் பெறப்பட்டு உம்பளச்சேரி கிராமத்தில் சுமார் 300 ஏக்கர் பாசன பரப்பிற்கு உம்பளச்சேரி மின் இறைவை பாசன திட்டத்தின் கீழும், வாய்மேடு கிராமத்தில் வளவனார் வாய்க்காலில் இருந்து தண்ணீர் பெறப்பட்டு வாய்மேடு கிராமத்தில் சுமார் 1,970 ஏக்கர் பாசன பரப்பிற்கு வளவனார் மின் இறைவை பாசன திட்டத்தின்கீழும் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. அறிவுரை மேற்கண்ட 4 மின் இறைவை பாசன மின் மோட்டார் அறைகளில் உள்ள மின் மோட்டார்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளதா? என பார்வையிட்டு, மின் மோட்டார்கள் பழுதின்றி பராமரித்திடவும், தேவைப்பட்டால் கூடுதலாக மின் மோட்டார்களை பயன்படுத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தின் அனைத்து பாசன பகுதி களுக்கும் தண்ணீர் தங்கு தடையின்றி செல்ல ஏதுவாக, தடைககள் மற்றும் அடைப்புகள் ஏதேனும் இருந்தால் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்தி சரி செய்ய பொது பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. விழுந்தமாவடி மின் இறைவை பாசன திட்டத்திற்கு ஒரு மின் மோட்டார் மாவட்ட கலெக்டரின் தன் விருப்ப நிதியில் இருந்து விரைவில் வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். பின்னர் அந்தந்த பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் கருத்துக்களை கேட்டறிந்தார். கலெக்டரின் இந்த ஆய்வின்போது பொதுப்பணித்துறை வெண்ணாறு வடிநில கோட்டம் (திருவாரூர்) ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர்கள் மாரிமுத்து, சங்கர், உதவி பொறியாளர்கள் சண்முகம், மகேஷ்குமார், தங்கமுத்து உள்பட பலர் உடனிருந்தனர்.

# <u>விவசாய தொழிலாளர்களுக்கு, மாதந்தோறும் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும்</u>



புதுக்கோட்டை, விவசாய தொழிலாளர்க ளுக்கு மாதந்தோறும் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 5-வது மாவட்ட மாநாடு தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் 5-வது மாவட்ட மாநாடு புதுக்கோட்டை அருகே உள்ள திருக்கோகர்ணத்தில் நடை பெற்றது. மாநாட்டிற்கு சங்க மாவட்ட தலைவர் மணி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சுந்தர ராசன், மாவட்ட பொருளாளர் ராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநாட்டில் மாநில செயலாளர் லெட் சுமணன் கலந்து கொண்டு பேசினார்.மாநாட்டில் இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி மாவட்ட செய லாளர் செங்கோடன், மாநில நிர்வாகக்குழு வீராச்சாமி, ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட செயலாளர் சிங்க முத்து, தர்மராஜன், மாதவன், அரசப்பன், திருநாவுக்கரசு, பாலச்சந்திரன், நகர செய லாளர் ராமச்சந்திரன், செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:- விவசாய தொழிலாளர் வாழ்வாதாரத்தை பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் தனித் துறை உருவாக்கிட வேண்டும். விவசாய தொழிலாளர் குடும் பங்களுக்கு மாதம் 30 கிலோ அரிசியை நியாய விலை

கடைகளில் வழங்கிட வேண் டும். தேசிய வேலை உறுதித்திட்டத்தில் பணிபுரி பவர்களுக்கு மத்திய அரசு அறிவித்தபடி ரூ.167 வழங்கிட வேண்டும். விவசாய தொழி லாளர் குடும்பங்களுக்கு 15 சென்ட் வீட்டுமனை வழங்கிட வேண்டும். 55 வயதான விவசாய தொழி லாளர்களுக்கு மாதந் தோறும் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும். காவிரி வைகை குண்டாறு இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல் படுத்திட வேண்டும். புதுக் கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறி வித்து வறட்சி நிவாரணம் வழங்கிட வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.

**துவாக்குடி பெரியகுளம் ரூ.4½ லட்சத்தில் சீரமைப்பு செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆய்வு**



திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துவாக்குடி பெரியகுளம் மூலம் அப்பகுதியில் 75 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்கு தண்ணீர் வழங்கி வருகிறது. காவிரி ஆற்றில் வரும் தண்ணீர் மற்றும் மழை தண்ணீர் பெரிய குளத்தில் தேக்கி வைக்கப்பட்டு பாசனத்திற்கு தேவைப்படும் காலங்களில் அங்குள்ள மதகு குழுமி மூலம் திறந்து விடப்படும். இந்நிலையில் பெரியகுளம் மதகு பாலம் அருகே உள்ள குழுமி பல வருடங்களாக பழுதடைந்து இருந்தது. எனவே குழுமியை சீரமைத்து பாசனத்திற்கு உதவும்படி அப்பகுதி மக்கள் செந்தில்குமார் எம்.எல்.ஏ.விடம் கோரிக்கை விடுத்தனர். இதை தொடர்ந்து அவர் தன்னுடைய சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குழுமியை பழுது பார்த்து சீரமைக்க ரூ.4½

லட்சம் நிதி ஒதுக்கினார். குழுமி சீரமைப்பு பணி விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதை செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார். மேலும் மழை காலம் தொடங்கும் முன்பு பணிகளை முடிக்க அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். இந்த ஆய்வின் போது தே.மு.தி.க. நகர செயலாளர் சிங்காரவேல், கிராம முக்கியஸ்தர்கள் சக்திவேல், தங்கமணி, ஆறுமுகம், சந்திரா, மணி, மூர்த்தி, முருகேசன், மதி மற்றும் பலர் உடன் சென்றனர்.

## பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்

மண்ணச்சநல்லூர் தாலுகா தீராம்பாளையத்தில் அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஒன்றிய குழு தலைவர் பரமேஸ்வரி முருகன் தலைமை தாங்கினார். தீராம்பாளையம் ஊராட்சி தலைவர் கிரிபால் முன்னிலை வகித்தார். அமைச்சர் பூனாட்சி 69 குடும்பங்களுக்கு அரசின் விலையில்லா வெள்ளாடுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. வக்கீல் ரத்தினவேல், அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் என்ஜினீயர் ஜெயகுமார், மாவட்ட ஆவின் பால்வள இயக்குனர் ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் மூக்கன், ஒன்றிய கவுன்சிலர் கதிர்வேலு, ஒன்றிய இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளர் ரமேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.